உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் திங்கள் தமிழ்த்தாள்

மலர் நாற்பத்தொன்று

1968

இதழாசிரியர் : மு. அருணசலம் எம். ஏ.,

துணையிதழாசிரியர் : அம்பலவாணன் இரா. சங்கரன்

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழமாட வீதி,

மயிலாப்பூர் : : சென்னை–4,

உள்ளுறை

பொருள்	கட்டுரையாளர்	பக்கஎண்
அடிமுடி அளப்பொணுத் தெய்வம்	மா. ப. தியாகராசன்	331
அத்தீச்சுரம்	மு. அ.	156
அப்பர் சுவாமிகள்	கொ. நீ. சிங்காரவேலு	208
அருகன் துதியும் அப்பரும்	ஆசிரியர்	37
உதகமண்டலம் உணர்த்திய உண்மைகள்	மா. ப. தியாகராசன்	133
எறும்புகளின் சமாதி நிலை	கொ. நீ. சி.	334
என்ன புண்ணியம் செய்தனை	R. S. இராமலிங்கம்	264
ஒரு வேண்டுகோள்	அம்பை இரா. சங்கரனுர்	47
do	அ. சோமசுந்தரஞ் செட்டியார்	339
கடவுள் அருள் சக்தி	காந்தியடிகள்	335
கல்வியில் இறைவணக்கம்	ஆசிரியர்	153
காந்தியடிகள் நாமம் வாழ்க	மு. அருணுசலம்	294
காழிக்கண்ணுடைய வள்ளலார்	அம்பை சங்கரனுர்	278
குகஸ்ரீ இரசபதி அடிகள்	துணையாசிரியர்	43
கும்பகோணம் பெரிய மடத்தில் மகாமகவிழா		86
கோபால செட்டியார் நூற்றுண்டு விழா	ஆசிரியர்	1
கோவிந்த மூப்பனுர் பெ.	துணையாசிரியர்	9
சதரத்தின சங்கிரகம்	ஆசிரியர்	349
சமய ஆராய்ச்சி நிவந்தம்	அம்பை சங்கரனுர்	361
சமாஜ 62ஆம் ஆண்டு விழா	G. கலியாணம்	12
,, வரவேற்புரை	K. கனகசபைப் பிள்ளை	அனுபந்தம்
,, தலைமைப் பேருரை	தவத்திரு மாணிக்க வாசக ஞானதேசிக சுவாமிகள்	do
,, தொடக்கவுரை	R. திருமதி இராதா அம்மையார்	25

,, சமாஜ 62ஆம் ஆண்டறிக்கை		அனுபந்தம்
,, சமாஜ 62ஆம் ஆண்டு விழா இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை		–அனுபந்தம்
சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம்		116, 247
சமாஜப் பணியாளர்கள்		49
சேதுராமன் தோத்திரப் பாடல்கள்	ஆசிரியர்	89
சேரமானும் திருமறைக்காடும்	ஆசிரியர்	57
சைவ சித்தாந்த வகுப்பு, கோவை		19
சைவந் தழுவிய சான்றோன்	கா. சிவகாமியம்மையார்	318
ஞான பூசாவிதி	அம்பை சங்கரனார்	309
தமிழ்த் தெய்வம்	R. S. இராமலிங்கம்	308
தமிழும் முருகனும்	பி. சொ. சண்முகம் பிள்ளை	75
தவநெறி	மா, ப. தியாகராஜன்	271
தாய்ச் சமயம் சாரல்	அம்பை	337
திரு ஆலம் பொழில்	மு. அ.	126
திரு ஈங்கோய் மலை	மு. அ.	226
திரு எருக்கத்தம் புலியூர்	மு. அ.	40
திருக்கலிக்காமூர்	மு. அ.	286
திருக்கானூர்	மு. அ.	95
திருக்குறளில் இறையுண்மை	கா. சிவகாமி யம்மையார்	202, 229.
திருக்குறளில் உயிருண்மை	do	258
திருக்குறளில் பிறப்புண்மை	do	288
திருக்கோட்டாறு	மு. அ.	199
திருப்புகழ்–வெளிவராத பாடல்கள்	ஆசிரியர்	217
திருமந்திரம் அரியவுரை	அம்பை சங்கரனார்	168, 239
திருமுக்கால்	ஆசிரியர்	249
திருமுறையும் அருமறையும்	சிவமீனாட்சிசுந்தரசிவை	80, 105, 129.
திருவாசகம்	அருள்திரு ஞானப்பிரகாச சுவாமிகள்	354
திருவாசகம் வேங்கடராமையர்	மு. அ.	4
திருவாசகம் சில பாடங்களின் விளக்கம்	ஆசிரியர்	185

திருவாசகம் சிலப்பிலக்கணக் குறிப்புகள்	ஆசிரியர்	313
திருவரசிலி	பு. மா. ஜயசெந்தில் நாதன்	254
திருவாட்போக்கித் தலயாத்திரை	ஆசிரியர்	121
திருவாரூர்	பு. மா. ஜயசெந்தில் நாதன்	61
திருவெண்காட்டில் சமாஜ ஆண்டு விழா	ஆசிரியர்	11
தீயவருக்கும் தேறுதல்	ஆசிரியர்	281
தூதுவிட்ட தொண்டர்	S. சங்கரநாராயணன்	297
தெளிவில் பிறந்த இருசுடர்கள்	கா. சிவகாமி அம்மையார்	161
நம் சமாஜக் கொடி	துணையாசிரியர்	60
நரியும் பரியும்	சிவயோகி இரத்தினசபாபதி பிள்ளை	323, 365
பாம்பனடிகள்	அம்பை சங்கரனார்	135
பிற செய்திகள்		213, 341
பொன்மொழிகள்	கொ. நீ. சி.	276
மதிப்புரை	அம்பை	21, 56, 88, 118, 149, 178, 242, 311.
மயூரவாகன சேவனம்	ந. ஜயராமனார்	358
மறக்கலுமாமோ?	சி. குமரேச பிள்ளை	45, 66.
மீனாட்சியம்மை கலிவெண்பா	அம்பை சங்கரனார்	72
முருகன் தத்துவம்	மா. ப. தியாகராசன்	174
மெய்கண்டார் நெறி	வ. ஆ. தேவசேனாபதி	97
வலிய ஆட்கொள்ளும் வள்ளல்	R. S. இராமலிங்கம்	141
வழிபாட்டின் பண்புகளும பாவனைகளும்	மா. ப. தியாகராஜன்	234

Registered No. M. 2590 "SIDDHANTHAM"
Vol. 41 — No. 1

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 41 | பிலவங்க தை 1968 ஜனவரி | இதழ்

உள்ளுறை

	பக்கம்
கோபால செட்டியார் நூற்றாண்டு விழா ...	1
திருவாசகம் வேங்கடராமையர் ...	4
வித்துவான் பெ. கோவிந்த மூப்பனார் ...	9
திருவெண்காட்டில் சமாஜ ஆண்டு விழா ...	11
சமாஜ 62-ஆம் ஆண்டு விழா ...	12
சைவ சித்தாந்த வகுப்பு கோவை ...	19
மதிப்புரை ...	21
அநுபந்தம் வரவேற்புரை	1-4
,, தலைமைப் பேருரை	1-14

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கர

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, மேலக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 28-1-68 ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, பிற செய்திகள் பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள்.

155318

செயலாளர்.

நம் சமாஜச் சார்பில் திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் அறுபதாம் ஆண்டு விழா 10-12-67 ஞாயிறு மாலை திருமயிலைக் கபாலீச்சுரத்தில் இந்திய அரசின் முன்னாள் அமைச்சர் C. R. பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. கபாலீச்சுரர் வழிபாடு முடிந்ததும் சமாஜச் சார்பில் வாழ்த்துரை வாசித்துக் கொடுக்கப் பெற்றது. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலிய பல பெருமக்கள் மணி விழாத் தலைவருக்கு வாழ்த்துக் கூறினர். புலவர் மன்றம் முதலிய பிற நிலையங்களும் இவ்விழாவில் கலந்து மணிவிழாத் தலைவருக்குச் சிறப்புச் செய்தன. மணி விழாத் தலைவரின் உரைக்குப்பின்னர் வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

R673mu1LN28
31K8

தை மாத விசேட தினங்கள்

2 (16-1-68) தைப் பூச விழா

6 (20-1-68) சண்டேசுர நாயனார் விழா

10 (24-1-68) திருநீலகண்ட நாயனார் விழா

17 (31-1-68) அப்பூதி யடிகள் விழா

21 (4-2-68) கலிக்கம்ப நாயனார் விழா

26 (9-2-68) கண்ணப்ப நாயனார் விழா

27 (10-2-68) அரிவாட்டாய நாயனார் விழா.

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41 | பிலவங்க ஹூ தை 1968 ஜனவரி | இதழ் 1

கோபால செட்டியார் நூற்றாண்டு விழா

ஆசிரியர்

சைவ சித்தாந்த சமய தத்துவமானது, தெய்வ நம்பிக்கையை அறிவியல் துறைக்குப் பொருந்துமாறு அமைத்துச் செய்யப்பட்ட ஒரு சிறந்த தத்துவமாகும். ஸ்வீடன் தேசத்தில் 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்து பெரிய ஞானியாக விளங்கி, தெய்வ தத்துவமானது அறிவியல் துறைகள் அனைத்துக்கும் ஒத்துள்ளது என்று நன்கு நிறுவிய பெரியார், எம்மானுவேல் ஸ்வீடன்பர்க் என்பவர் ஆவர். அவருடைய நூல்களைப் படித்த தமிழ் நாட்டாராகிய கோபால செட்டியார் சைவ சித்தாந்தத்துக்கும் ஸ்வீடன்பர்க் கூறிய கருத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமையைப் பல புத்தகங்களால் எழுதிக் காட்டியிருக்கிறார். இப்பெரியார் பிறந்த நூறாவது ஆண்டு விழா 18-11-67 ல் கொண்டாடப்பட்டது. பிற அன்பர்களோடு சேர்ந்து செட்டியாருடைய நினைவுக்கு நாமும் நம் அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறோம்.

செட்டியார் தர்மபுரியில் 17-11-1867 இல் பிறந்தார். சிலநாள் பள்ளி ஆசிரியராக வேலை செய்தார். இளைஞர்களை ஒன்று சேர்த்து விவேகானந்தர் நூல்களைப் பயிலச்

செய்தார். பின்னர் சென்னை சென்று சட்டக் கல்வி பயின்றார். அக்காலத்தில் இவருடைய மனம் சமூக சீர்திருத்தத் துறையில் பெரிதும் சென்றது. அதற்கான சங்கம் நிறுவிப் பணி செய்தார். பிளீடர்ஷிப் பரிட்சை தேறி, திருப்பத்தூர் வந்து வக்கீலாகத் தொழில் புரிந்தார். அங்கு இப்போதுள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் சங்கத்தை அப்போது நிறுவினார். சமயத் துறையில் இவர் மனம் சென்றது. சிவஞானபோதம் கற்று ஆராய்வதற்காகப் பலரை ஒன்று சேர்த்தார். பின் 1907 இல் பத்திரிகையாளராகி நியூ ரிபார்மர் (புதிய சீர்திருத்தவாதி) என்ற ஆங்கில மாதப் பத்திரிகை தொடங்கிப் பத்து வருஷ காலம் நடத்தி வந்தார். காந்தியின் நண்பராகிய ஆன்ட்ரூஸ், காந்தியின் குரு என்று போற்றப் பெற்ற டால்ஸ்டாய் ஆகியோர் இவருடைய வேலையைப் பாராட்டினார்கள். இவர் எழுதிய டால்ஸ்டாய் சரித்திரம் ரஷ்ய மொழியிலும் வெளியிடப் பெற்றது என்று சொல்வர்.

இவருடைய பத்திரிகையில் ஸ்வீடன்பர்க் பற்றி வெளிவந்த ஒரு கட்டுரையினால் இவர் முதல் முதல் இப் பெரியார் நூல்களை அறிய நேர்ந்தது. மிக்க மன எழுச்சியோடு அவருடைய நூல்களை இவர் படித்தார். அக் காலத்தில் தமிழ் நாட்டில் சைவ சித்தாந்தத்தைப் பரப்புவதில் முனைந்திருந்த J. M. நல்லசாமிப் பிள்ளையின் தொடர்பு இவருக்கு உண்டாயிற்று. அதன்மேல் இவர் சைவ சித்தாந்த நூல்களைப் பயின்றபோது, சைவ சித்தாந்த தத்துவங்களுக்கும் ஸ்வீடன்பர்க் கூறிய கருத்துக்களுக்கும் நிரம்ப ஒற்றுமை இருப்பதைக் கண்டார். இவற்றை ஆராய்ந்து முப்பொருள் உறவு என்ற ஒரு சிறு நூல் 1921 இல் எழுதினார். பலரும் இதைப் பாராட்டிய போது இவர் மேலும் உழைத்து 'ஸ்வீடன்பர்க்கும் சைவ சித்தாந்தமும்' என்ற ஒரு பெருநூல் ஆங்கிலத்தில் எழுதினார். இது மிகவும் சிறப்பாக இங்கிலாந்தில் வெளியாயிற்று. அதன் மூலம் பலர் கோபால் செட்டியை முதன் முதலாக அறிந்தது மட்டுமின்றி, சைவ சித்தாந்தத்தையும் ஸ்வீடன்பர்க்கையும் முதன் முதலாக அறிந்

தார்கள். இங்கிலாந்தில் இருந்த சட்டன் என்ற ஒரு பாதிரியார் அரக்கோணம் வந்து, அங்கிருந்த கோபால் செட்டியைக் கலந்து பேசிச் சென்றார்.

பின்னர் இவர் தாம் கண்ட இவ்வுண்மைகளைப் பற்றியே எந்த நேரமும் பிரசாரம் செய்து கொண்டிருந் தார். சென்னையில் ஸ்வீடன்பர்க் சங்கம் என்ற சங்கத்தை நிறுவினார்; பம்பாய் சங்கத்துக்குத் தலைவரா யிருந்தார். முப்பது ஆண்டுகள் இவ்வாறு இதேவேலையில் ஈடுபட்டு 28-12-53 இல் இறைவன் திருவடியை அடைந் தார்.

கோபால் செட்டியார் ஸ்வீடன்பர்க் கூறிய விரிவான பரந்த கொள்கைகளை நன்கு உணர்ந்தார். அவற்றினும் மேலான கருத்துக்கள் சைவ சித்தாந்தத்துள் அடங்கி யிருப்பதைக் கண்டு அவற்றை ஸ்வீடன்பர்க் கோட்பாடு களின் வாயிலாக உலகுக்கு எடுத்துக் காட்டினார். முன் குறித்த பெருநூலில் இதைப் பரக்கக் காணலாம். பதி இலக்கணம், ஆன்ம இலக்கணம், குறிகளும் அடையாள மும், உருவ வழிபாடு, திரு அருள், வினை உண்மை முதலான பொருள்களை அவர் நன்கு ஆய்ந்திருக்கிறார். சைவமே படித்துக் கொண்டிருப்பவர்கள், தங்கள் கருத் துக்களைப் புற உலகத்தார் நன்குணரும்படி எடுத்துச் சொல்ல இயலாது. வேற்றுமைக் கண்கொண்டு நோக்கும் போதுதான் புதுச் செய்திகளும் கருத்துக்களும் வெளிப் படும். அதிலும் முக்கியமாக, ஆங்கில நூல்களோடு ஒப்பிட்டு ஆங்கிலத்தில் எடுத்துரைக்கும்போது கற்போர் பல நாடுகளிலும் ஏற்க இடமுண்டாகிறது. உலகம் மிகப் பரந்திருக்கிறது. உண்மை ஒளி இருக்குமாயின், ஆங்கிலத்தின் வழி அதைப் பின்னும் அதிகமானபேர் பார்த்துப் போற்றும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட வாய்ப்பை ஏற்படுத்தியவர்களுள் கோபால் செட்டி மிகவும் முக்கியமானவர். ஸ்வீடன்பர்க்

நூல்க்ளில் ஐந்து நூல்களை இவர் தமிழில் மொழி பெயர்த்தார். அதுமட்டுமின்றி ஆங்கிலத்தில் மேற்சொன்னவாறு எழுதிய பெருநூல்களோடு கூட சிதம்பர ரகசிய விளக்கம், உலக உற்பத்தி, புராதன பிரிட்டிஷ் மக்களுடைய சமயமெது என்ற ஆங்கில நூல்களும் பதிபசுபாச விளக்கம் என்ற தமிழ் நூலும் எழுதி வெளியிட்டார்.

இவர் காலமான பிறகு, இவருடைய புதல்வர் இராஜமாணிக்கம் செட்டி, தாம் வகித்த உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றபின், காட்பாடியில் தங்கி ஸ்வீடன்பார்க் நிலையத்தை நடத்தி வருகிறார். இந்த விழா எடுத்த சமயத்தில் நாமும் கோபால் செட்டியாரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தி, நிலயத்தாருடைய பணிகள் வெல்க என்று வாழ்த்துகிறோம்.

——:0:——

திருவாசகம் வேங்கடராமையர்

மு. அ.

" அருட் செல்வம் செல்வத்துட் செல்வம், பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள " என்ற திருக்குறளுக்கு இலக்கியம்போல வாழ்ந்த பரம ஏழையான வேங்கடராமையர் என்பவர் ஐப்பசி மாதம் கடைசி தினத்தன்று திருக்குடந்தையில் சிவபெருமான் திருவடி நிழலடைந்தார்.

அவர் திருவாசகம் வேங்கடராமையர் என்றே வழங்கப் பெற்றார்; செட்டி நாடு, சென்னை போன்ற சில இடங்களில் சிவனடியார் திருக்கூட்டங்களில் நன்கு அறிமுகமானவர் " திருவாசகம் வந்தது ", " திருவாசகம் போயிற்று " என்றே அவரைத் தெரிந்தவர்கள் அவரைக் குறிப்பிடுவார்கள். திருவாசகம் ஒன்றே பாடுவது என்ற குறிக்கோளை நெடுங்காலம் கொண்டிருந்து, அப்பாடற் சிறப்புக் காரணமாக அவர் இவ்வாறு வழங்கப் பெற்றிருந்தார். திருவாசகம் அவர் பாடுவார்: பாட்டில் இசை முக்கியமன்று, பொருட் பொலிவே முக்கியமாகக் கொண்டு

பாடினார். திருவாசகம் முழுமையும் அவருக்கு இளம் பருவத்திலிருந்தே மனப்பாடம். எங்கும் திருவாசகமே பாடினார், எதற்கும் திருவாசகமே பாடினார்.

அவர் பிறந்தது மதுரையை யடுத்த மேலூர். சாதியால் அவர் அந்தணர். மொழியால் அவர் தெலுங்கர். ஆனால் உணர்வால் அவர் மாணிக்கவாசகருக்கு அடிமை. அவருக்கு மனைவி பிற சுற்றத்தார் எல்லாரும் இருந்தனர். ஆனால், அவர் அனைவரையும் துறந்து, மாற்று வேட்டி மூட்டையோடு, தமிழ் நாடெங்கும் சிவாலய தரிசனம் செய்து வந்தார். முதிர்ந்த வயதிலும் அவர் நடைக்குச் சளைக்கமாட்டார். தலையில் மூட்டையை வைத்துக் கொண்டு, கையில் பிடித்த குடையுடனும் காலில் செருப்புடனும் நாவில் சிவபெருமான் திருநாமத்துடனும் அவர் நடந்துகொண்டே யிருப்பார். தென்னிந்திய நாட்டில் அவர் தரிசனம் செய்யாத சிவாலயமும் முருகன் கோயிலும் இல்லை. எந்தக் கோயிலிலும் அதற்குரிய தேவாரமோ திருவாசகமோ திருப்புகழ்ப் பாடலோ பாடுவார். பாடுவது சிலசமயம் குழைவாகவும், சிலசமயம் வியாக்கியானம் போலவும், சிலசமயம் அலறல் போலவும் இருக்கும். அவர் எப்படிப் பாடியபோதிலும், அவர் பாடியபோது சுற்றியுள்ளார் அனைவரும் அவர் பாட்டில் ஈடுபடாமலிருக்க முடியாது.

சிவாலய தரிசனம் ஒன்றே அவருக்குத் தொழில். திருவாசகம் பாடுவதே அவருடைய குறிக்கோள். வாழ்க்கையின் பிற்காலத்தில் அவர் தேவாரத்தையும் திருப்புகழையும் மிக்க பொருட் பொலிவோடு பாடிவந்தார்.

திருப்புகழ்ப் பாடல்களிலும் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களிலும் அவருக்கு உள்ள ஈடுபாடும் பயிற்சியும் அளவற்றன. தல வரலாறுகளை நன்கு விளக்குகின்ற சிதம்பர முனிவர் பாடிய க்ஷேத்திரக் கோவைப பிள்ளைத் தமிழ் முழுமையும் அவருக்குப் பாடம். அதைக் குழைந்து பொருள் விளங்கப் பாடுவார். திருமலை முருகன் பிள்ளைத்

தமிழில் அவருக்கு ஈடுபாடு மிகவும் அதிகம், அதில் எல்லாப் பாடல்களையும் பாடுவார். பின்னும், சிறப்பான பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் போக, சி. கோ. சுப்பிரமணிய முதலியார் பாடிய அவிநாசி கருணாம்பிகை யம்மைப் பிள்ளைத் தமிழ், மு. ரா. அருணாசலக் கவிராயர் பாடிய திருப்பரங்கிரி முருகன் பிள்ளைத் தமிழ் போன்ற இக்காலப் பாடல்களையும் நன்கு சுவைத்துப் பாடுவார். யாரைக் கண்டாலும் பாட்டைச் சொல்லுவார். பாட்டின் மூலமே தான் யாவருக்கும் அவருடைய அறிமுகம் ஏற்பட்டிருக்கும்.

பாடுகின்ற பாடல்கள் யாவும் மிக்க அருட் சுவையும் பொருட் சுவையும் ததும்பியனவாய் இருக்கும். எப்படித் தான் சுவையான பாடல்களை அவர் தேர்ந்தெடுக்கக் கற்றுக் கொண்டாரோ ''

விடையான் விரும்பியென் னுள்ளத் திருந்தான் ;
இனி நமக்கிங்
கடையா அவலம் ; அருவினை சாரா ; நமனை யஞ்சோம் ;
புடையார் கமலத் தயன்போல் பவர்பா திரிப்புலியூர்
உடையான் அடியார் அடி அடி யோங்கட் கரியதுண்டே.

என்று அவர் அடிக்கடி பாடுவார். அவ்விதமே விடையான் விரும்பி அவர் உள்ளத்திலிருந்து நல்ல பாடல்களை அவருக்குக் கற்பித்தான் என்று சொல்லவே தோன்றுகிறது.

அவர் சிவபெருமானே சரண் என்ற தீவிர வைராக்கிய முடையவர். சிவபெருமானே நமக்குத் துணையாவான், வேறு சார்புகள் பயன்தரா என்ற உறுதிப்பாடு காரணமாக, அவர் எங்கும் பின்வரும் திருவாசகம் பாடிப் பரவுவதுண்டு :

பார்பாடும் பாதாளர் பாடும் விண்ணோர் தம்பாடும்
ஆர்பாடும் சாரா வகையருளி ஆண்டுகொண்ட

நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப் பெரியோன்
சீர் பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ

"சிவபெருமானுடைய தொண்டனாகிய எனக்கு அவன் என்னதான் சாதிக்கமாட்டான்?" என்ற திட உறுதி உள்ளவர். அதில் அவர் உறைத்து நின்றவர். இது உண்மைதான் என்பதை அவர் வாழ்க்கையில் அன்பர்கள் கண்டிருக்கிறார்கள். அவரிடத்தில் ஒரு சல்லிக் காசும் கிடையாது; அதை அவர் விரும்பவில்லை. ஆனால் எப்படியோ தினந்தோறும் அவருடைய பிரயாணம் நடந்து கொண்டிருந்தது. தலங்களைச் சென்று தரிசித்துச் சந்நிதியில் பாடுவதே அவரது வேலை. இன்று மதுரையில் பாடுவார்; நாளை சிதம்பரம்; மறுநாள் காளத்தி; அங்கிருந்து தென்கோடி திருச்செந்தூர்! "நான் எங்கள் அப்பனைக்கேட்டேன் அவன் எனக்குக் கொடுத்தான்". என்பார். இன்றைக்கு மதுரைக்குப் போகிறேன் என்று யாரிடமேனும் சொல்லுவார். வழிச் செலவுக்குக் கொடுப்பார்கள். அவ்வளவுதான்: அதற்குமேல் ஒருவர் கொடுத்ததுமில்லை. அவர் கேட்டதுமில்லை. பெரிய சிவாலயங்களில் நடைபெறும் விழாக்களெங்கும் அவரைக் காணலாம். திருமுறை பாடுபவர்கள் பிழையாகப் பாடினால் உடனே திருத்துவார். எந்த இடம் என்று யோசனை செய்யவே மாட்டார். ஒன்று இங்கு குறிப்பிடுதல் தகும். இக்காலத்தில் திருவாசக திருப்பள்ளி யெழுச்சி பாடுதல் எங்கும் வழக்கமாய் இருக்கிறது. இதன் கடைசியடியின் பிற்பகுதி,

"எம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே"

என்பதுபோல எல்லாப் பாடல்களிலும் அமைந்துள்ளது. பாடுவார்கள் பாடும்பொழுது, பொதுவாக "எம்பெருமான் பள்ளி என்று சேர்த்துப் பாடி, நிறுத்தி, பின்னர் "எழுந் தருளாயே" என்று தனியாகப் பாடி முடிப்பது வழக்கம். இவர் இதைக்கேட்கும்போது சிறிதும் பொறுக்கமாட்டார். உடனே "எம்பெருமா......ன்" என்று நீட்டிப் பாடி, பிறகு "பள்ளி—யெழுந்தருளாயே" என்று சேர்த்துப் பாடச் சொல்லி, அப்படியே பாடியுங்காட்டிப் பழக்குவார்.

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு சமயம் சிதம்பரம் நடராசர் சந்நிதியில் அவருடைய அறிமுகம் எமக்கு ஏற்பட்டது. "ஆடி சுவாதி, நால்வர் விழா! எங்கள் கோயிலில் மாணக்கர் ஈடுபட்டுச் செய்கிறார்கள், வர வேண்டும்" என்றேன். வந்தார். பலமுறை வந்துகொண்டிருந்தார். அவர் பாட்டைக் கேட்ட ஊரிலுள்ளார் "திருவாசகம் மறுபடி எப்போது வரும் எப்போது வரும்" என்று கேட்ட வண்ணமே இருப்பார்கள். சமாஜக் கூட்டங்களில் அவ்வரை அன்பர்கள் பலர் பார்த்திருக்கக் கூடும்.

அவர், "எங்கள் மாணிக்க சுவாமிகள்" "எங்கள் சேக்கிழார் சுவாமிகள்" என்று சொல்லும்போது கேட்பவருக்கு மெய்சிலிர்க்கும்.

அவர் இசையில் வல்லவர் அல்லர். சங்கீதம் அவருக்குத் தெரியாது. ஆயினும் தேவாரத்தைப் பண்ணுடனே பாடவேண்டும திருவாசகத்தை மோகனத்திலேயே பாட வேண்டும் என்பது போன்ற கண்டிப்பு உடையவர். பிறர் வேறு விதமாய்ப் பாடினுல் அவர் பொறுக்க மாட்டார்.

அவரிடமிருந்து எத்தனையோ நல்ல பாடல்களை நாம் கற்றதுண்டு.

இந்த ஐப்பசி மாதம் கடைமுழுக்கு அன்று திருக்குடந்தையில் இருந்தார். காலையில் காவேரியில் நீராடிவிட்டுக் குடந்தை சைவப்பெரியார் சுந்தரேசஞ் செட்டியார் அவர்களோடு கும்பேசுவரர் இலட்சார்ச்சனையைத் தரிசித்துவிட்டு, அவர் இல்லத்திலேயே இரவு வந்து படுத்தார். படுத்தபோது அசௌகரியம் ஒன்றும் இல்லை. இரவு பன்னிரண்டு மணிக்கு ஏதோ அரவம் கேட்டுச் செட்டியார் வந்து பார்த்தபோது, அவருக்கு மார்பில் வலி. உடனே ஒரு வண்டியில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டுச் செட்டியார் சைக்கிளில் சென்று பரிசோதனைக்கு

டாக்டரைச் சித்தமாக இருக்கச் செய்தார். டாக்டரும் சித்தமாகி, வண்டியின் வரவை இருவரும் எதிர்நோக்கி யிருந்தார்கள். வண்டி வந்தது வண்டியில் வேங்கடராம ஐயர் உடலைக் கண்டார்கள். அவரது ஆன்மா இக்கூட்டை விட்டு இறைவன் திருவடி நிழலில் சென்று கலந்து அடங்கிவிட்டது. அப்போது அவருக்கு வயது சுமார் 73.

உயிரிருந்த வரையில் குஞ்சித்த சேவடியைக் கும்பிட்டே இருந்த அந்த ஆத்மாவுக்கு, உடலை நீத்த பின்னும் நடராசப் பெருமான், குஞ்சித்த சேவடியைக் கும்பிட்டே இருக்கும் பெருவாழ்வு அளித்திருப்பான் என்பது உறுதி.

வித்துவான் பெ. கோவிந்த மூப்பனர்

(துணையாசிரியர்)

நம சமாஜ நெடுநாளைய அன்பர் வித்துவான் பெ. கோவிந்த மூப்பனர் அவர்கள் சென்னையில் நிகழவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழர் மாநாட்டுக்கு வந்துகொண் டிருக்கும்போது 1–1–68 இரவு 3 மணிக்கு இரயிலேயே இறைவன் திருவடியைச் சிந்தித்த வண்ணம் வீடு பேறடைந் தார்கள்.

திரு. மூப்பனர் அவர்கள் சிதம்பரம் மீனாட்சிக் கல்லூரியில் படித்து வித்துவான் பட்டம் பெற்றவராவர். சிறந்த கவிதை எழுதும் ஆற்றலுமிக்கவர். அவர் பாக்கள் S.S.L.C. தமிழ் நூலிலும் செல்லாண்டுகளுக்கு முன் இடம் பெற்றிருந்தன. தமிழ்ப் பற்றும் சைவ சித்தாந்தப் பற்றும் மிக்கவர். பழநி மாநாட்டில் முதன் முதல் அவரைக் கண்டு அளவளாவும் பேறுபெற்றேன். அதுமுதல் நெருங்கிய தொடர்பும் யான் கொண்டிருந்தேன். அவர் ஆரவாரமற்ற

அழுத்தமான சமயப்பற்றுள்ளவர். முதலில் கோவை மாவட்டத்திலும், பின்னர் இராமநாதபுரம் மாவட்டத்திலுமுள்ள மாவட்டக்கழக உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியத் தொண்டு புரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அண்மையில் திருவெண்காட்டில் நிகழ்ந்த நம் சமாஜ மாநாட்டுக்கு வந்திருந்தார். அங்கிருந்து திரும்பி 1-1-68 அன்று தென் திருமுலலைவாயில், திருக்குருகாவூர், சீர்காழி முதலிய பாடல் பெற்ற தலங்களைக் கண்டு அவன் புகழைப் பாடி வணங்கினர். பின்னர் அன்று மாலை சென்னைக்குப் புறப்பட்டார். திண்டிவனம் பக்கம் வண்டி வரும்போது தலைசுழன்று உடனே கீழே விழுந்தார். அவர் ஆன்மா பிரிந்து போயிற்று.

அவர் உண்மைச் சமையப்பற்றுக்கு இதனைவிட வேறு சான்று வேண்டுமோ? நாள் முழுவதும் அவன் திருத்தலங்கள் மூன்றினை வழிபட்டுத்தல், அவன் பொருள் சேர் புகழைப் பேசுதல், பாடுதல், சிறிதும இறப்புத் துன்பம் இன்றி உயிர் நீத்தல் ஆகிய அரும்பேறுகளைப் பெற்ற அப்பெரியாரின் பெருமையை நினைந்து நினைந்து அவ்வண்டிப்பெட்டியிலுள்ளார் அனைவரும் வியந்தனர்: அவர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவில்லிபுத்தூரைச் சார்ந்தவர். 69 வயது பெற்ற ஊக்கம் குன்று உயர்திருவினர். மனைவியும ஒரு மகனும் உள்ளனர். அவர் ஆன்மா இறைவன் திருவடியில் நன்னிலையுற்றிருக்கு மென்பதுறுதி.

ஆனல் அவர் குடும்பத்தினர் இகலோக வாழ்க்கையில் அவர் இலலாதிருப்பது கண்டு வருநதுவதியற்கை அவர்களுக்கு சமாஜம வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அவர் ஆன்மா நன்னிலையுற்றுச் சிறந்திலங்க எல்லாம்வல்ல பெருமான் அருள் செய்ய அவனடிகளை வாழ்த்தி வணங்கி வேணடுகின்றோம்.

திருவெண்காட்டில் சமாஜ ஆண்டு விழா.

ஆசிரியர்

சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் 62 ஆம் ஆண்டு விழா 1967 டிசம்பர் 29, 30, 31 தேதிகளில் மெய்கண்டாரின் அவதாரத்தலமாகிய திருவெண்காட்டில் சிறப்பாக நடைபெற்றது. சைவ மக்களுக்குத் திருவெண்காடு மிகவும் புனிதமான தலம். "பேயடையா" என்ற சம்பந்தர் திருப்பதிகம் சுட்டியபடி அச்சுதகளப்பாளர் இங்கு வந்து புத்திரப்பேறு அடைந்தார் என்பது மட்டுமின்றி, இன்றுங்கூட புத்திரப்பேறில்லாத பலர் வந்து, முக்குள தீர்த்தத்தில் நீராடி, பெருமானை வழிபட்டுப் புதல்வர்ப்பேறு அடைகிறார்கள். பல வருடங்களுக்கு முன்னே இங்கு மகாநாட்டை நடத்த முயன்றும்கூட, இவ்வாண்டில் இங்கு இதை நடத்தி வைக்க முடிந்தது இறைவன் திருவருள். தலத்தின் பல பெருமைகளை வரவேற்புரையில் விளக்கமாகக் காணலாம்.

சமாஜத்தார் தங்கியிருக்கவும் மகாநாடுகள் நடத்தவும் தேவஸ்தானத்துக்குரிய பெணகள் உயர்நிலைப் பள்ளியில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. எல்லா வசதிகளையும் செய்து கொடுத்த வரவேற்புக் குழுவினருக்கும் நன்றி பாராட்டவேண்டும் சிறப்பாகக் குழுவின் செயலாளராகிய சீர்காழி பஞ்சாயத்து ஒன்றியத்தின் தலைவர் திருவெண்காடு மு. சீனிவாசப் பிள்ளை அவர்களுடைய சேவையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மேலையூர் குருபூஜை மடத்தின் அதிபராகிய ஸ்ரீ மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் மகாநாட்டிற்குத் தலைமை வகித்து, மிகவும் பொருள்பொதிந்த தலைமையுரையாற்றினார்கள். சிறப்பான சில சொற்பொழிவுகள் நிகழப் பெற்றன. பழ. இரத்தினஞ் செட்டியார் சைவத்தின் நான்கு பாகங்களையும் விளக்கி சிறப்பாகப் பரமுத்தியின் இயல்பையும் யோகத்தின் கருத்தையும் சிவபெரு

மானே குருவாக வந்து அருள் செய்யும் கொள்கையையும் விளக்கியது கேட்போருக்கு மிக்க பயன் தருவதாயிருந்தது. இளைஞர் மகாநாட்டில் இளைஞர்களே பங்கு கொண்டு நன்முறையில் பேசியது மிகவும் அழகியது.

அன்பர்கள் திருக்கலிக்காமூர், கீழைத்திருக்காட்டுப் பள்ளி, பல்லவனீச்சுவரம், திருச்சாய்க்காடு, திருவலம் புரம், அத்தீச்சுரம் என்ற வைப்புத்தலம் ஆகியவற்றைக் கண்டு வழிபடும் வாய்ப்புப் பெற்றனர்கள். மகாநாடு சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் சமாஜத்தின் நன்றியும் வாழ்த்தும் உரியன. புதிய ஆண்டு நிர்வாகக் குழு உறுப்பினர் பட்டியல் தனியே காணலாம்.

சமாஜ 62-ஆம் ஆண்டு விழா

[G. கலியாணம் M.A., D.Econ.,]

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 62–ஆம் ஆண்டு விழாவும், அதன் அங்கமாகச் சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும், 29, 30, 31–12–67 வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருவெண்காடுசுவேதாரணி யேசுவரர் தேவஸ்தானப் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் மிகச் சிறப்பாக நடந்தது. தஞ்சை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோவை, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சென்னை, செங்கல்பட்டு மதுரை, இராமநாதபுரம் மாவட் டங்கள், மலேசியா, இலங்கை முதலிய இடங்களிலிருந்தும் அன்பர்கள் வந்திருந்தனர்.

முதல் நாள்: ஸ்ரீ சுவேதாரணியேஸ்வரர் கோயிலில் அனைவரும் வழிபாடாற்றினர். அறங்காவலர்கள் சிறந்த முறையில் அலங்கார ஆராதனைகள் செய்து வைத்தார் கள். காலை 9 மணியளவில் மாநாடு தொடங்கியது. திருக் குறள்வேள் திரு. கு. வரதராசப் பிள்ளை பி ஏ., அவர்கள் இடபக் கொடியை ஏற்றி வைத்தனர், இறை வணக்கத் தின் பின் கொடியின் மகிமையைப் பற்றி 'கொடிக் கவி' யினின்றும் மேற்கோள்களுடன் திருக்குறள்வேள் பேசினார் கள். திரு கே. கனகசபைப் பிள்ளையவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். (வேறு இடத்தில் காண்க.) மேலையூர் தவத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் சைவர் மா நாட்டிற்குத் தலைமை வகித்தார்கள். திரு. அம்பை இரா.

சங்கரனார் அவர்கள் வரவேற்புப் பாவைப் பாடிக் கொடுத் தார்கள்: சமாஜச் செயலாளர் திரு. சி. வடிவேல் பிள்ளை அவர்கள் சமாஜ ஆண்டு அறிக்கையை வாசித்தார்கள். திருமதி. ஆர். இராதா அம்மையார் அவர்கள் திறப்பு உரை நிகழ்த்தினார்கள். சைவ சமயத்தின் தொன்மைப் பெரு மைகளையும், அதன் தற்கால நிலைமையையும் விளக்கிப் பேசினார்கள். பின்னர் தலைமை வகித்த சுவாமிகள் தங்க ளுடைய தலைமைப் பேருரையை ஆற்றினார்கள். (வேறு இடத்தில் காண்க). சைவ சமய வரலாறு, நிகழ்ந்த இடர்ப்பாடுகள், அதை நீக்கிய நால்வர், நாயன்மார்கள், சாத்திர நூல்களைத் தந்த சான்றோர்கள் முதலியவற்றைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். முற்பகல் நிகழ்ச்சிகள் 1 மணியுடன் நிறைவுற்றது.

மாலையில்: நான்கு மணிக்கு மீண்டும் மாநாடு தொடங்கியது. திருவதிகை திரு. ரா சண்முகசுந்தரம் செட் டியாரவர்கள் 'பண்காட்டிப் படியாய தன்பத்தர்' என்னும் தலைப்பில் தொழுகை இருவகைப்படும் என்றும், படி என் பது உலகம், படிதல், கலத்தல், ஒன்றி நிற்றல் என்ற பொருள்படும் என்றும், அறிவு, தொழுகை, தொண்டு என்ற மூன்றும் இன்றியமையாதவை என்றும் பேசினார் கள். தலைவர் அவர்கள 'தன் படியாய பத்தர்' என்பது 'தன்னுடைய உருவம் போன்ற அடியார்' என்ற கருத்தை வெளியிட்டார்கள. பின்னர் டாக்டர் திரு. வ ஆ, தேவ சேனாபதி எம்.ஏ., அவர்கள் 'மெய் கண்டார் நெறி' என் னும் பொருள் பற்றிப் பேசினார்கள் அவர்கள் திருவெண் காட்டுத் தலத்தைப் பற்றிய சம்பந்தர் தேவாரத்தில் 'பிள் ளைப்பிறையும்' என்று தொடங்கும் பாடலையும், அப்பர் தேவாரத்தில், 'ஊனுக்கு மினபம்' என்று தொடங்கும் பாடலையும் கொண்டு, உறுநோய்கள் என்பது 'மல மாயை தன்னொடும்' என்ற சாத்திரக் கூற்றை நினை வூட்டுகிறதென்றும், ஆணவம் இன்றியமையாத குறை (சகஜமலம்) என்றும், வினை மூவகை யென்றும், அதைப் பற்றி எண்ணி நாம் புழுங்குகிறோம் என்றும் பிறர் துன் பத்தை ஏற்பதற்கும் தன் துன்பத்தை மறப்பதற்கும் நாம்

முயல வேண்டும் என்றும், அதற்கு அடையாளமாக விளங்குவது சிவபெருமானின் திருநீலகண்டம் என்றும், 'அவனே தானே' என்ற சூத்திரத்தை விளக்கி நுண்ணிய கருத்துக்களுடைய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் ஏகான்மவாதிகளான ஆதிசங்கரர், சுப்பையா சுவாமிகள், திருக்களர் ஆண்டவர் முதலியோர் சக்தி, விநாயகர், நடராசர் ஆகிய மூர்த்திகளை உபாசித்தார்களென்றும் கருத்துரையில் கூறினார்கள். மூன்றாவதாக மலேசியா திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் அவர்கள் 'அழிவில் தவம்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள். எட்டாம் திருமுறையும் எட்டாஞ் சூத்திரமும் ஒன்று பட்டவை என்றும் ஹிப்னாடிசம் போன்றவை பிறர் மனத்தைப் பிரிக்கும் கலை என்றும், சைவத் தவம் சரியை, கிரியை, யோகம் என்றும், உடம்பால் செய்வது சரியை உடம்பாலும் மனத்தாலும் செய்வது கிரியை, மனத்தால் மட்டும் வழிபடுவது யோகம், அறிவால் செய்வது ஞானம் என்றும், உருவத் திருமேனி எல்லா நிலைக்கும் வேண்டும் என்றும், அது இறைவன் கனிந்து இறங்கிய நிலை என்றும், 'உள்ளக்கிழியில் உருவெழுதி' என்று அப்பர் பெருமான் கூறுகிறார் என்றும், இலக்கியம், வரலாறு, சாத்திரம் முதலியவைகளிலிருந்து மேற்கோள்களுடன் விளக்கிப் பேசினார்கள் தலைவரவர்கள், 'உலகமே சூனியம், கடவுளே இல்லை, ஆன்மா இல்லை' என்று சொன்னவர்கள் கூடத் தவம் பற்றிச் சொல்லியுள்ளனர் என்று பகர்ந்தார்கள். கடைசியாக திரு. கீ. இராமலிங்கனார் எம்.ஏ., அவர்கள், திரு மா. ப. தியாகராசன் பி.ஏ., அவர்கள் எழுதிய விசேடவுரையுடன் கூடிய 'திருவெம்பாவை' நூலை சமாஜ வெளியீடாக வெளியிட்டார்கள். தமக்கே உரிய முறையில் திருவெம்பாவைப் பாடல்களுக்கு விளக்கம் தந்தார்கள். 'உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்பது புதுமணப் பெண் பேச்சாக அமைந்திருக்கிறது என்று கூறினார்கள். குழந்தை கருவிலிருக்கும் போது பத்து மாதக் கிரியை செய்வதென்றும், அக்குழந்தை உனக்கு அடைக்கலம் என்றும் பொருள்படும் என்னும் கருத்துடன் தலைவரவர்கள் முடிவுரை கூறினார்கள். கடவுள் வாழ்த்துடன் இரவு 9 மணிக்கு முதல் நாள் விழா இனிது நிறைவேறியது.

இரண்டாம் நாள்: அதிகாலையில் அன்பர்கள் திருவெண்காட்டுக் கோயிலுக்குள்ளிருக்கும் சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் ஆகிய முக்குள நீராடி, திருப்பள்ளி யெழுச்சி வழிபாடாற்றினர். பின்னர், இத்தலத்திற்கு மேற்கே ஒரு கல் தொலைவிலுள்ள கீழைத் திருக்காட்டுப் பள்ளி யென்னும் பதிக்கு, திருவாசகம் சிவபுராணம் ஓதிக் கொண்டு சென்றடைந்தனர். திருவாளர்கள் அம்பை சங்கரனார், ஆடலரசு இவர்கள் தலத் தேவாரப் பாடல்களைப் பாட மற்றையோரும் பாடினர். வழிபாட்டிற்குப் பின் ஆரணிய முனிவர் உருவத்தைப் பார்த்தும் தென்முகக் கடவுளுக்கருகில் சுவரில் கடல் ஒலி போன்ற ஓசையைக் கேட்டும் மகிழ்ந்து திருவெண்காடு திரும்பினர்.

பிறகு 10 மணிக்கு உயர்நிலைப் பள்ளியில் சமாஜ உறுப்பினர் பொதுக் கூட்டம் கூடியது. கோயில்களில் உபரி வருமானத்தைக் கல்விக்குப் பயன் படுத்த அரசாங்கத்தார் கொண்டு வர இருக்கும் சட்டத்தைப் பற்றிப் பேச ஒரு தூதுக்குழு அனுப்ப வேண்டுமென்றும் டாக்டர் அ. சிதம்பரநாதன், டாக்டர் மா. இராசமாணிக்கம், பொருளாளர் இராமசாமி, கோலாலம்பூர் எஸ். பழனிவேல் பிள்ளை, வா. தி. மாசிலாமணி முதலியார், செக வீரபாண்டியனார், திருவாசகம் வெங்கடராமய்யர் முதலியோர் மறைந்ததற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்க வேண்டும் என்றும், அடுத்த ஆண்டு முதல் சமாஜ ஆண்டு விழாவிற்கு வரும் அன்பர்கள் அனைவரும் உணவுச் செலவுக்காக மூன்று ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேறின. பகல் உணவுக்குப் பின் 3 மணிக்குப் பொதுக் கூட்டம் தொடர்ந்து நடந்தது. சமாஜச் செயற்குழு, வெளியூர் ஆலோசனைக் குழு முதலியவற்றிற்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். திரு. ஜி. கலியாணம் அடுத்த சமாஜ ஆண்டு விழாவை மதுரையில் நடத்த அழைத்தார். சமாஜச் செயலாளர் திரு. சி. வடிவேல் பிள்ளை அவர்கள் அவ்வழைப்பை ஏற்றார்கள். இசைப் பேரறிஞரும் திருமுறை விற்பன்னருமான

குடந்தை திரு. ப. சுந்தரேசம் பிள்ளையவர்கள் சிந்தைக் கினிய திருமுறைப் பாடல்களைப் பண்முறையோடு ஓதி அவையினரை ஆனந்தக் கடலில் திளைப்பித்தனர்.

மாலை 5 மணிக்கு சைவ மங்கையர் மாநாடு தொடங்கியது. திருமதி இந்திரா சோமசுந்தரம் எம்.ஏ., அவர்கள் தலைமை வகித்தார்கள். சைவ சமயத்தின் சிறப்பியல்களையும், சைவ மங்கையர் செய்த தொண்டுகளையும், சைவப் பெண்கள் கடமைகளையும், குழந்தைகளைச் சமய நெறியில் வளர்க்க வேண்டிய முறைகளையும் பற்றி விரிவானதொரு சொற்பெருக் காற்றினார்கள். திருமதி. மீனாட்சி சுந்தர சிவை அவர்கள் 'திருமுறையும் அருமறையும்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் திருமுறைக் கருத்துக்களையும், சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் பொருத்தி விளக்கினார்கள். அப்பர் அருளிய 'முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்' என்ற திருப்பாடலுக்குக் கண்ணப்பர் வரலாறு எடுத்துக்காட்டாக விளங்குவதைக் கூறியது மிகவும் அழகாக இருந்தது. அடுத்து, திருமதி. துரையம்மாள் அவர்கள் 'மங்கையர்க்கரசியாரும் திலகவதியாரும்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினார்கள். மங்கையர்க்கரசியார்தான் திருஞானசம்பந்தரைக் கொண்டு பாண்டி நாட்டைச் சமண சமயத்தினின்றும் திருப்பினர் என்றும், தமிழ் நாட்டின் வட பகுதியில் திலகவதியார் அப்பர் சுவாமிகளைக் கொண்டும் அவ்வாறு செய்வித்தனர் என்றும், நாயன்மார்கள் பலரின் வரலாற்றுடன் இணைந்த பெண்கள் சமயத்திற்கு அருந் தொண்டாற்றியுள்ளனரென்றும் சுருக்கமாகவும் அழகாகவும் பேசினார்கள். தலைவர் அவர்களின் முடிவுரைக்குப் பின் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது

மூன்றும் நாள்: அதிகாலையில் எல்லோரும் பூம்புகார் சென்று காவிரி சங்கமத்தில் கடலாடினர். பிறகு கண்ணகி சிலையைக் கண்டு களித்தனர். புகார் நகரப் புதை பொருள்களையும், அகழ்ந்தெடுக்கப்பட்ட ஒரு புத்த விகாரத்தையும் பார்த்தனர். பாடல் பெற்ற பதிகளான காவி

ரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சுரம், திருச்சாய்க்காடு கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்தனர். அவ்வத் தலத் தேவாரப் பாடல்களை முறையே பாடி வலம் வந்தனர். பின்னர் காலைச் சிற்றுண்டியை மேலையூர் சிவராஜ யோக மடத்தில் அருந்தினர். தவத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் அவர்கள் அன்புடன் சிற்றுண்டியை வழங்கியதற்கு எல்லோருடைய நன்றியறிதலான வணக்கம் உரித்தாகும். அங்கிருந்து அனைவரும் காவிரிக்குத் தென்கரையிலுள்ள திருவலம்புரம் என்ற மூவர் தேவாரம் பெற்ற பதிக்குச் சென்று வழிபட்டனர். அவ்வமயம் குடந்தை திரு. சுந்தரேசம் பிள்ளையவர்கள் தலத் தேவாரப் பாடல்களைப் பாடி அன்பர்களைப் பரவசப் படுத்தினர். திருசாய்க்காட்டில் 'வில்லேந்திய வேலர்', திருவலம்புரத்தில் 'வட்டணைநாயகர்' ஆகிய இத் திருவுருவங்கள் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தன. பின்னர் எல்லோரும் நண்பகல் உணவுக்குத் திருவெண்காடு திரும்பினர்.

மாலை 4 மணிக்குச் சைவ இளைஞர் மாநாடு தொடங்கியது. திரு கு. ஆளுடைய பிள்ளை எம். ஏ., அவர்கள் தலைமை தாங்கினார்கள். இறை வணக்கத்தின் பின் தலைமையுரையை நிகழ்த்தினார்கள். (பின்னர் வெளிவரும்) தற்கால சைவ இளைஞர்களின் கடமைகளைப் பற்றி வற்புறுத்திப் பேசினார்கள். திரு சொ. சிங்கார வேலனார் எம்.ஏ. அவர்கள் 'தாண்டகப் புதுமை' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழி வாற்றினார்கள். அதன் சாரம் :- தாண்டகம் என்ற சொல் தமிழ் இலக்கணத்தில் இல்லை. தண்டகம் என்ற வடமொழிச் சொல்லுக்கும் இதற்கும் தொடர்பில்லை. இதுவே ஒரு புதுமை. அப்பர் பெருமான் தான் இவ்வகைப் பாடலை முதலில் பாடினர். காண் காண், ஆகி ஆகி, தாமே தாமே, போலும் போலும், கண்டாய் கண்டாய் என்று வரும் பாடல்கள் ஒரு புதுமையே. தாண்டகம் இறைவன் முன்னின்று உருகிப் பாடுவது. தலப் பயணத்தில் வழி நடையில் பாடுவது திருக்குறுந் தொகை. அப்பர் சமண சமயத்தில் இருக்கும் போது 'கற்றறியேன் ...என்று தொடங்கும் பாடலுடன்' 11 பாடல்களுடைய

ஒரு பதிகம் பாடியுள்ளார். நடைப்போக்கு, சொல்லமைப்பு, சீர் தொகுப்பு எல்லாம் அவற்றில் இருப்பதால் அப்பர் திருவாக்கு என்பதில் ஐயமில்லை. அங்கு அதைப் போல்பாடிய இன்னும் பல பதிகங்கள் இருந்திருக்கலாம். அவை இப்போது கிடைக்கவில்லை. அகர எழுத்துத் தொடங்கி வரிசையில் பாடிய பாடல்களும் ஒரு புதுமை. இதை எழுத்துவர்க்க மோனை என்பர். இவற்றை யெல்லாம்நோக்க, அப்பர் பெருமானைத் தாண்டக வேந்தர், தாண்டகச்சதுரர் என்று அழைப்பது சாலப் பொருத்தமுடையது. பின்னர் திரு இரா. செல்வ கணபதி, திரு. நடராஜன் ஆகியவர்கள் முறையே 'சைவத்தின் இருவிழிகள்' 'ஆன்ம தரிசனம்' என்னும் பொருள்கள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரை கூறினார்கள். வரவேற்புச் செயலாளர் திரு T. M. சீனிவாசப் பிள்ளையவர்களும், சமாஜச் செயலாளர் திரு சி. வடிவேல் பிள்ளையவர்களும், மாநாட்டுத் தலைவர்கள், திறப்பாளர், சொற்பொழிவாளர்கள் முதலியவர்களுக்கு நன்றி கூறினார்கள். மூன்று நாட்களிலும் தங்குவதற்கு இடவசதியும், அறுசுவையுணவும் அளித்த வரவேற்புக் குழுவினருக்கு நன்றி பாராட்டும் கடப்பாடுடையோம் அண்மையில் உள்ள பாடல் பெற்ற தலங்களில் சிறந்த முறையில் வழிபாடாற்ற உதவி செய்த அறங் காவலர்களுக்கும், மற்றையோருக்கும் நன்றி தெரிவிக்கும் கடமை எல்லோருடையதாகும். மூன்று நாட்களிலும் சொற்பொழிவுகளுக்கிடையே திருமுறைகள் பாடி மகிழ்வித்த திரு. தண்டபாணி தேசிகருக்கு நன்றி உரித்தாகும.

மூன்று நாட்கள் ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் முடிந்த பின்னரும் நான்காம் நாள் வெளியூர் அனபர்கள் இரண்டு மூன்று பகுதிகளாகப் பிரிந்து திருவெண்காட்டைச் சுற்றியுள்ள தென திருமுல்லைவாயில், திருக்குருகாவூர், திருககலிக்காமூர், திருநல்லூர்ப் பெருமணம், திருமயேந்திர பள்ளி, சீகாழி முதலிய தலங்களுக்குச் சென்று வழிபட்டனர். இந்த ஆண்டு விழாவின் போது பல தலங்களை வழிபடும் வாய்ப்புக் கிடைத்தது ஒரு தனிச் சிறப்பாகும்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

சைவ சித்தாந்த வகுப்பு கோவை

கோவை கூட்டுறவு பால் வழங்கு கழகத் தலைவர் சைவத் திரு. ம. ச. பழனியப்ப முதலியார் அவர்களின் ஆதரவில் கோவைத் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் சைவ சித்தாந்த வகுப்பு 2-11-67 முதல் 25-12 67 வரை நடைபெற்றது.

காஞ்சிபுரம், தொண்டை மண்டல ஆதீன கர்த்தர் சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சிவஞானசித்தியார் பாடம் நடத்தியருளினார்கள். கல்லூரி, உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள்—இவற்றில் பணியாற்றுவோர் ஆக ஐம்பதின்மர் நாடோறும் தொடர்ந்து பாடம் கேட்டுப் பயன் பெற்றனர்.

இவ்வகுப்பின் தொடக்க விழா 2-11-67 இல் கோவை சமரச சுத்த சன்மார்க்க சங்கக் கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் பேரூர் ஆதீனம் சீலஸ்ரீ சாந்தலிங்க இராமசாமி அடிகளும், சிரவணபுரம் கௌமார மடத்து அதிபர் சீலஸ்ரீ சுந்தர சுவாமிகளும் வந்திருந்து சிறப்பித்தனர்,

கோவைத் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் நாள்தோறும் மாலை 6-30 மணி முதல் 8 மணி வரை வகுப்பு நடைபெற்றது. தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாளர் சைவத் திரு. சம்பந்த முதலியாரவர்கள் வகுப்புக்கள் நடைபெறுவதற்குச் செவ்விதின் இடவசதி கொடுத்துத் தாமும் உடனிருந்து பாடம் கேட்டனர்.

இவ்வகுப்பின் நிறைவு விழா 25-12-67 திங்கட்கிழமை தேவார இன்னிசையுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மலர்களால் அழகு செய்யப் பெற்ற கொலு மேடையில்

சிலஸ்ரீ சந்நிதானங்களை எழுந்தருளச் செய்து அன்பர்கள் முறைப்படி வழிபாடும் 108 வெண் பொற்காசுகள் கொண்டு அருச்சனையும் செய்தனர். பேரூர் பட்டீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் சார்பில் சிலஸ்ரீ சந்நிதானங் களுக்குக் கோவில் மரியாதை நடைபெற்றது. கோவை கவியரசு கு. நடேச கவுண்டர் அவர்களால் யாக்கப் பெற்ற ஞானப்பிரகாச தேசிகர் பதிகம் சந்நிதானங் கட்குச் சமர்ப்பிக்கப் பெற்றது. சிலஸ்ரீ சந்நிதானங்கள் ஆசியுரையும் திருநீற்றுப் பிரசாதமும் வழங்கியருள விழா இனிது நிறைவேறியது.

காஞ்சிபுரத்திலிருந்து சிலஸ்ரீ சந்நிதானங்களை அழைத்து வந்து இரண்டு மாதகாலம் தமது இல்லத்தில் சுவாமிகளை இருக்கச் செய்து வகுப்பு நடைபெறுவதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் சைவத்திரு ம. ச. பழனியப்ப முதலியார் அவர்கள் செய்து உதவினார்கள்.

சமய தீக்ஷை

கோவைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த வகுப்பிற் பாடம் கேட்ட அன்பர்களுள் இருபதின்மருக்கு 7-12-67 அன்று பேரூர் அரசம்பலவாணர் சந்நிதியில் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன கர்த்தர் சிலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சமய தீக்ஷை செய்வித்தருளினார்கள். இந் நிகழ்ச்சியை யொட்டி அரசம்பலவாணருக்கு விசேட அபிடேகம் நடைபெற்றது. திரு. சம்பந்த முதலியார் அவர்கள் சிறப்பாக மகேஸ்வர பூசை நடத்தினார்கள்.

மதிப்புரை

"அருள் ஒளி—குருவருள் பாசுரம்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் சிவனடிமை க. மாசிலாமணிப் பிள்ளை ஆவர். ஆசிரியர் தம் பக்தி முதிர்ச்சியனுபவத்தால் இறையருள் நாட்டம் பெற்று அதன் பயனைப் போந்த பாக்களென இந்நூலில் காணும் பாக்களைப் பற்றிக் கூறுகின்றார்.

துதி, குறையிரத்தல், திருவருட் பிரசாதம், பழைய துதிப்பாடல் திரட்டு என நான்கு அத்தியாயங்களில் இந்நூலில் காணப்பெறும் 654 பாடல்களும் (அகவல், கலி வெண்பா உட்பட) விளங்குகின்றன. பாக்கள் நன்கு பத்திச் சுவை ஊட்டுவனவாயுள்ளன. மறுமதிப்பிலாவது எழுத்துப் பிழைகள் மலியாதிருக்கின் நன்றாயிருக்கும். யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக. வேண்டுவோர் க மாசிலாமணிப் பிள்ளை "திருமந்திரம்" திருநகர், மதுரை-6 என்னும் முகவரிக்கு எழுதி இந்நூலைப் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 1–50. (அம்பை)

"சன்மார்க்க பாலபாடம்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் சிவனடிமை க. மாசிலாமணிப் பிள்ளை ஆவர். இந்நூல் இளஞ்சிறார்க்கும் நம் சமய அடிப்படை உண்மைகளை அங்கை நெல்லியென எடுத்துக் காட்டவல்லது. பெற்றோர் தம் குழந்தைகளை சமய அறிவும் பெறுமாறு செய்து வளர்க்க ஈடுபடவேண்டும் எனவும் இந்நூல் வலியுறுத்துகின்றது. இக்காலத்திற்கு இத்தகைய நூல்கள் பல தேவை. ஆசிரியரின் இம்முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது. நல்ல முறையில் அச்சிடப்பட்டு 78 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ. 1–00. யாவரும் தாம் வாங்கிப் படித்தலோடு பிறரையும் படிக்கச் செய்து சமய அறிவு மேம்பாடடையச் செய்தல் நலம். அவசியம் வாங்கிப் படிப்பார்களாக. நூல் வேண்டுவோர் க. மாசிலாமணிப் பிள்ளை, "திருமந்திரம்"

திருநகர், மதுரை—6. என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். (அம்பை)

"சென்னிமலேத் தலபுராணம்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்ருேம். இப்புராணத்தை இற்றைக்கு ஏறக்குறைய 600 ஆண்டுகட்கு முன்னிருந்த சரவண முனிவர் என்ற பெரியார் இயற்றினர். இந்நூல் 6 மான்யங்களில் 207 செய்யுட்களேக் கொண்டு விளங்குகிறது. இதில் காணும் செய்யுட்கள் யாவும் மிகவும் செம்பாகமானவை. அவற்றிற்கு வித்துவான் வேலம்பாளேயம் ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் பொழிப்புரையும் விளக்கவுரையும் மிக நன்முறையில் எழுதியுள்ளார்கள். நல்ல ஆராய்ச்சி முன்னுரை, தலபுராண வசனச் சுருக்கம், சிறப்புப்பாயிரங்கள் உட்பட இந்நூல் 250 பக்கங்களுக்கு மேலாகத் திகழ்கின்றது. கொங்கு நாட்டுச் சிறந்த முருகன் தலமாய சென்னிமலேயைப் பற்றிய பல உண்மைகளே இந்நூலிலிருந்து காணலாம்.

சென்னிமலே வேலருக்குச் சேர்கொம் பிரண்டுண்டு
கன்னிகுற வள்ளிக்குக் காலில்லே—யன்னவர்தம்
ஆட்டுக்குக் காலில்லே யானேக்குக் கொம்பில்லே
பாட்டுக்கு ளாராய்ந்து பார்

என்பது சென்னிமலேயைப் பற்றிய பழைய சம்பிரதாய வெண்பாவாம். சென்னிமலேயைப் பற்றி இத்தகைய பல சிறப்பியல்புகளேயும் இந்நூலில் பரக்கக் காணலாம். உரையாசிரியர் மிகவும் அரிதின் முயன்று இந்நூலேப் பதிப்பித்திருக்கின்ருர். அவர் முயற்சி போற்றத் தக்கது. இப்புராணம் முருகன் பெருமையைப் பலபடக் கூறுகின்றதாதலின் எல்லாரும் அவசியம் வாங்கிப் படிப்பார்களாக. நூல் வேண்டுவோர் வித்துவான். வே, ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், வேலம்பாளேயம், எழுமாத்தூர் வழி, ஈரோடு R. M. S. என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். விலே ரூ. 3—00. தபாற் கூலி வேறு.

(அம்பை)

"தண்டபாணி தமிழ்ப்பாமாலை" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இந்நூல் மாயூரம் கச்சேரி சாலையி லுள்ள மலைக்கோயிலில் திருக்கோயில்கொண்டிலங்கும் தண்டபாணி சுவாமி மீது பாடப்பெற்றதாகும் இதன் ஆசிரியர்கள் மாயூரம் அ. வ. அ. கல்லூரிப் பேராசிரியர் கள் தி. வ. காந்திமதிநாதன் பி. ஏ. ஹானர்ஸ், அ. கலிய பெருமாள் எம். ஏ. ஆகியோர் ஆவர்.

இக்கோயிலையும் அதனை அடுத்த அபிராமி அம்மை யார் யோக மடத்தையும் நம் சமாஜப் பேரன்பர் G. கலி யாணம் பிள்ளை அவர்களின் பாட்டியார் நிறுவினர். அவர் கள் சிறப்புப் பற்றி முன்னரே நம் சித்தாந்த இதழ் மூலம் ஒரு கட்டுரையும் வெளிவந்துள்ளது.

இந்நூலில் தண்டபாணிக் கடவுளை ஆசிரியர் அருள் காட்டும் அன்னை, அறிவு தரும் தந்தை அன்புநிறை அண் ணன், கொஞ்சும் குழந்தை, மயல்போக்கும் மருத்துவன், வெற்றிதரும் வீரன், கண் நிறைந்த கணவன், பெருமை சேர்க்கும் பெண்ணரசி, துணை வரும் தோழன், தொடர்ந்தி டும் தொண்டன், அகம் விளக்கும் ஆசிரியன், சீர்தரும் தெய்வம் எனப் பல்வேறு நோக்கில் போற்றிப் புகழ்ந்து பாடியிருக்கும் திறம் மிகவும் மெச்சுதற்குரியது. பாரதி யார் கண்ணனைக் குறித்துப் பாடிப் போற்றியதைப்போல் இந்நூல் தண்டபாணிச் சிறப்பைப் பலவாறு புகழ்ந்து கூறுகிறது. மிக எளிமையும் இனிமையும் வாய்ந்த பாக் கள் கொண்ட இந்நூலை யாவரும் வாங்கிப் படித்தல் நலம். 36 பக்கங்கள் கொண்டது; நல்ல அச்சு; விலை குறிப்பிடப்பெறவில்லை. வெளியிட்டோர் யோக. G. அண்ணாமலைப் பிள்ளை, ஏகதேச பரம்பரை தர்மகர்த்தர், தவத்திரு அபிராமி அம்மையார் யோக மடம், தண்ட பாணி சுவாமி கோயில், கச்சேரிசாலை, மாயூரம், தஞ்சை மாவட்டம்.

(அம்பை)

"அற்புதத்திருவந்தாதி குறிப்புரையுடன்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது காரைக்காலம்மையா ரால் அருளப்பெற்ற சிறந்த நூலாகும். பதினொன்றாந்

திருமுறையில் சேர்க்கப்பெற்ற பெருமை வாய்ந்தது. இந்நூலுக்கு மயிலம் சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர் ந. இராமலிங்கம் எம். ஏ., பி. ஓ. எல். அவர்கள் சிறந்த குறிப்புரை எழுதியுதவியுள்ளார்கள். மேலும் காரைக்காலம்மையாரும் அவர் அருளிய நூற்களின் சிறப்பும் பற்றித் தாம் எழுதிய ஓர் அரிய ஆங்கில ஆராய்ச்சிக் கட்டுரையும் இந்நூலின் பிற்சேர்க்கையாக இடம்பெற்றுள்ளது. இதனை வெளியிட்டோர் நம் சமாஜப் பேரன்பர் சிவநேயர் சி. இராச கணபதிப் பிள்ளை பி. எ., பி எல். அவர்கள், காரைக்கால். நூல் வேண்டுவோர் அவர்களுக்கே எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். 42 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 0–50 ஆகும். யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக.

(அம்பை)

—:0:—

ஓர் வேண்டுகோள்

பேராசிரியர் மறை திருநாவுக்கரசு அவர்கள் நம் சமாஜ நெடுநாளைய அன்பர் என்பது யாவரும் அறிந்ததே. அவருக்கு அண்மையில் மணிவிழா நிகழவிருக்கின்றது. அவ்விழாவுக்கென திரு. அ. சீநிவாசராகவன் எம். ஏ. அவர்களைத் தலைவராகக் கொண்ட மணிவிழாக் குழுவொன்று செயல்படுகின்றது. நம் சைவ சித்தாந்த சமய முன்னேற்றமும் தமிழ் மேம்பாடுமே தம் வாழ்வின் குறிக்கோளென அல்லும் பகலும் உழைத்த அப்பெரியார் மணிவிழாச் சிறக்க சமாஜ அன்பர்கள் பணவுதவியாலும், ஆசியாலும் மற்றும் பல்லாற்றானும் உதவியருள வேண்டுகின்றோம்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:

பேராசிரியர் அ. சீநிவாசராகவன் எம்.ஏ.,
தலைவர், தூத்துக்குடி—3.

உ

சிவமயம்

சென்னை சைவசித்தாந்த மகா சமாஜம்
62-ஆம் ஆண்டு விழா
திருவெண்காடு

வரவேற்புரை

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளநினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

சைவப் பெரியோர்களே !

சைவமக்களுக்கு மிகவும் புனிதமான இத்திருவெண் காட்டிற்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

சைவ சித்தாந்த முதல் சாத்திரமாகிய சிவஞான போதத்தைச்செய்தருளிய மெய்கண்டதேவர் இத்தலத்தில் அவதரித்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். திருப் பெண்ணாகடத்தில் இருந்த அச்சுதகளப்பாளர் பிள்ளைப் பேறு இன்றி வருந்தி தம் குலகுருவாகிய சகலாகம பண்டிதரை இதுபற்றி வினவியபோது அவர் தேவார அடங்கன் முறையில் கயிறு சாத்திப் பார்த்து “பேயடையா” என்னும் சம்பந்தர் தேவாரம் கிடைக்கப் பெற்றுஅதன்படி களப்பாளரைத் திருவெண்காடடைந்து முக்குள தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபடுமாறு கூறினர். அவரும் அவ்வாறே இங்கு வந்து வழிபட்டு மெய்கண்டாரைப் புத்திரராகப் பெற்றார். மூன்று வயதில் பரஞ்சோதி முனிவரால் உபதேசிக்கப் பெற்ற குழந்தை

மெய்கண்டார் சைவ சமயத்திறகு மூலசாத்திரமாகிய சிவஞான போதத்தை நாற்பதே வரிகள் கொண்ட பன்னிரு சூத்திரங்களாகப் பாடியருளினர். பரம்பொருள் ஒன்றுண்டு. ஆன்மாக்கள் பல. இவை அறியாமையில் அழுந்தித் துன்புறும் போது நல்வினையின் பயனுகத் திருவருளின் துணைகொண்டு அறியாமையினின்றும் நீங்கி இறைவன் திருவடி அடைகின்றன.இதுவே மெய்கண்டார் கூறிய செம்பொருள்.

இப்பொருளை அவர் உபதேசித்த காலங்தொடங்கி இக்கருத்துக்கள் தமிழ்நாடெங்கும் பரவி நம்மக்களை நல்வழிப்படுத்தி வந்திருக்கின்றன.

இத்தலத்தில் மெய்கண்டார் அவதரித்தமை எல்லா விதத்திலும் பொருத்தமாகும். இங்குச் சமயாசாரியர் நால்வரும் பாடியிருக்கின்றனர். எல்லாச் சிறப்புக்களும் பொருந்திய பெரிய சிவாலயம் இங்கு உள்ளது. அகோர மூர்த்திக்குரிய சிறப்பான தலம். மூர்த்தித்ரயம்—ஸ்வேதாரண்யர், அகோரமூர்த்தி, நடராஜப்பெருமான்; சக்தித்ரயம் – அம்பிகை, துர்க்கை, காளி; தீர்த்தத்ரயம்- சோம, சூரிய, அக்னி குண்டங்களாகிய முக்குளத் தீர்த்தம்; விருக்ஷத்ரயம்-ஆல், கொன்றை, வில்வம்; ஆகமத்ரயம்–காரணம், காமிகம், மகுடம் என்றபெருமைகள் இத்தலத்துக்குரியன.

சைவ எல்லப்ப நாவலர் இத்தலத்திற்குப் புராணம் பாடியிருக்கிறார். அதனுள் நடராஜப்பெருமானின் கௌரி தாண்டவத்தைச் சிறப்பித்துள்ளார். சிதம்பரம் போலவே இங்கும் இரகசியம் அமைந்துள்ளது.

இந்நகர் பண்டைய சோழர் தலைநகராகிய பூம்புகார் நகரம் மிக்க சிறப்போடிருந்த காலத்து அதன் புறநகர்களில் ஒன்றாய் இருந்தது. பூம்புகார்கடல் கொள்ளப்பட்ட பின் அதன் பகுதியாகிய இந்நகரில் மட்டும் இந்திர விழாவானது 'இந்திர மகோற்சவம்'என்ற பெயரில் நின்று நிலவி வருகிறது. இதைச் சூழ்ந்துள்ள சிறப்பான

தலங்கள் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் பெற்ற பன்னிரு திருப்பதிகள், திருக்கலிக்காமூர், பல்லவனீச்சுரம், திருச்சாய்க்காடு, திருவலம்புரம், கீழைத்திருக் காட்டுப்பள்ளி, என்பன.

காவிரி நதி மணிகர்ணிகை என்னும் தன் கிளையோடு இருமருங்கிலும் இந்நகரைச் சூழ்ந்து வருகிறது.

துறவிகளுள் தலைசிறந்தவராகிய பட்டினத்தார் இத் தலத்தில் உபதேசம் பெற்று திருவெண்காடரானார்.

இத்துணைச் சிறப்புமிக்க இத்தலத்தில் இவ்வாண்டு சமாஜ விழா நடைபெறுவது எல்லாவகையிலும் பொருத்தமாகும். இங்கு வந்திருக்கின்ற சைவ மக்கள் நடைபெறப்போகும் பேருரைகளைக் கேட்டுப் பயனடைய வேண்டுகிறோம். சைவ சித்தாந்த மகா சாமாஜம் செய்துள்ள பணிகளை நாங்கள் நன்கு அறிவோம். பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும், அருணகிரிநாதர் திருப்புகழ் ஆதிய நூல்களையும், சங்க இலக்கியங்களையும் திருத்தமாக அச்சிட்டு மிகவும் குறைந்த விலையில் சமாஜம் வழங்கி யிருப்பது பிறர் எவரும் செய்ய முடியாத தொண்டு.

இனி சமாஜம் செய்யவேண்டிய பணியும் உண்டு. இன்று மக்கள் செல்லுகின்ற, சமயத்தை மறந்த பாதை யிலிருந்து அவர்களை மீட்பதற்குச் சிறுசமய நூல்கள் தேவை. சமாஜம் இத்துறையில் நூல்கள் வெளியிட முன்வர வேண்டும். சைவ சித்தாந்தம் கூறுகின்ற கடவுள் கொள்கை என்ன, அத்வைதம் என்றால் என்ன சிவாலயம், வழிபாடு என்றால் என்ன—என்னும் இவற்றை எளிய நடையில் விளக்கி நூல்கள் எழுதி உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும்பயிலும்மாணவர்க்கிடையே பிரசாரம் செய்ய வேண்டும். பெண்மக்கள் இடையிலும் அதிகமான பிரசாரம் வேண்டும். இந்தத் துறையில் சமாஜம் முயன்றால் எதிர்காலத்தில் நம் மக்களிடை நிச்சயம் சிவமணம் கமழும், ஒழுக்கக்கேடுகள் சமூகத்தில் மறையும் என்பது உறுதி.

இச்சமாஜ விழாவில் தலைமை தாங்க இசைந்தருளிய தவத்திரு மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகளுக்கும், சைவமங்கையர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் திருமதி.இந்திராசோமசுந்தரம் அம்மையாருக்கும் சைவ இளைஞர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் திரு. ஆளுடையபிள்ளை அவர்களுக்கும், கொடியேற்றிவைக்கும் திருக்குறள்வேள் திரு. குரு. வரதராஜ பிள்ளை அவர்களுக்கும், பேருரையாற்றும் அறிஞர்களுக்கும், சமாஜ நிர்வாகக் குழுவினர், உறுப்பினர் ஆகியோருக்கும், இங்குக் குழுமியிருக்கும் அன்பர்களுக்கும் உளங்கனிந்த வரவேற்புக் கூறுகின்றோம்.

உடனாயும் வேறாயும் இருந்து எல்லாவற்றையும் நடத்தி வைக்கின்ற சுவேதாரண்ய சுவாமியின் திருவருளை வாழ்த்தி வணங்குகின்றோம்.

திருவெண்காடு,
29—12—1967.

இங்ஙனம்,

வரவேற்புக் கழகத்தார்.

அரசு அச்சகம், சீர்காழி.

சிவமயம்

திருஞானசம்பந்த தேசிகன் திருவடி வாழ்க.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

62-ஆம் ஆண்டு நிறைவு விழா

29—12—1967.

திருவெண்காடு.

சைவர் மாநாட்டுத் தலைமை உரை

மறைத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் அவர்கள்
சிவராஜயோக மடம்,
காவிரிப்பூம்பட்டினம் மேலையூர்.

தூண்டு சுடர்மேனித் தூநீ றாடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவம் காதிற் பெய்து
பொற்சடைக ளவைதாழப் புரிவெண் ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே.

— திருத்தாண்டகம்

நால்வர் துதி

போற்றியோ நமச்சி வாய ஞானசம் பந்தர் பொற்றாள்
போற்றியோ நமச்சி வாய ஞானநா வரசர் பொற்றாள்
போற்றியோ நமச்சி வாய ஞானஆ ரூரர் பொற்றாள்
போற்றியோ நமச்சி வாய ஞானவா சகனார் பொற்றாள்

மெய்யன்பர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

அறுபது ஆண்டுகட்கு மேலாக சைவ சமயத் தொண்டாற்றி வரும் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆண்டுவிழாவில் தலைமை தாங்குமாறு பணித்த தங்கள் பேரன்பிற்கு எனது நன்றியையும் இங்கே குழுமியுள்ள தங்கள் அனைவருக்கும் எனது போற்றுதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு என் உரையைத் தொடங்குகின்றேன்.

ஆதி சிதம்பரம் எனப் புகழ்பெற்றதும், பதஞ்சலி வியாக்ரபாத முனிவர்கட்கு சம்ஹார தாண்டவக் காட்சி கொடுத்ததும், கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீ அகோரமூர்த்தி சன்னதியைத் தன்னகத்தே கொண்டதும், ஐராவதத்தின் சாபத்தைத் தீர்த்த காரணத்தால் தேவேந்திரனால் பெரும் திருவிழா எடுக்கப்பட்டதுமான திருவெண்காடு சிவ தலங்களுள் சிறந்ததொன்றாகும். இயற்பகையார் தோன்றிய திருச்சாய்க்காடும், பட்டினத்தார் தோன்றிய காவிரிப்பூம்பட்டினமும் சைவத் தமிழறிஞர் அனைவரையும் கவர்ந்த ஒரு திருப்பாட்டாகிய 'சைவத்தின் மேற் சமயம் வேறிலை' என்ற பாடல் முதலாக பல தலபுராணங்களையும் கலம்பகத்தையும் இயற்றிய புலவர் பெருமான் சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் தோன்றிய இலையமுதுகூடமும் இத்தலத்தைச் சூழ்ந்து விளங்குவனவாகும். நால்வர் பாடலும் பெற்றதோடன்றி, சைவ சித்தாந்த முழு முதல் நூலாகிய சிவஞான போதம் செப்பிய குருமுதல்வர் ஸ்ரீ மெய்கண்ட தேவரைத் தோற்றுவித்ததும் திருவெண்காட்டுப் பெருமான் திருவருளே என்பதையும் நாம் எல்லோரும் அறிவோம். ஆதலால் இந்தத் தலத்தில் இத்தகைய மாநாடு நடைபெறுவது மிகவும் பொருத்தமானது மட்டுமின்றி மகிழ்ச்சியும் தருவதாகும். இம் மாநாட்டினை இங்கே நடைபெற ஏற்பாடு செய்த மகா சமாஜத்தினர்க்கு இந்தப் பக்கத்து பொதுமக்கள் சார்பாகவும் நமது திருமடத்தின் சார்பாகவும் சிறப்பாக எனது பாராட்டுதலையும் நன்றியறிதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சைவ சமயத்தின் தொன்மை

மெய்யன்பர்களே! கற்கால மக்கள்கூட சிவலிங்கத்தையும் நந்தியையும் வழிபட்டார்கள் என்பதற்கும் சிவலிங்கம், நாகம், நந்தி இவற்றின் வழிபாடு மிகப்பழங் காலத்திலேயே உலகமெங்கும் பரவியிருந்தது என்பதற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன. 'இந்திய நாகரீகமும் அதன் தொன்மையும்' என்ற நூல் இந்த விவரங்களை சரித்திர பூர்வமான ஆதாரங்களுடன் தருகின்றது. (Indian Civilisation and its antiquity by B. Mukerjee) உயிர் — உடல் — பஞ்சபூதக் கலப்பு இவ்வுலகம் - என்ற உண்மைகளையும் உலக இன்பத்திற்கு மேம்பட்ட நிலைகளை அடைய மக்கள் முயன்று வந்தார்கள் என்பதையும் தொல்காப்பியம் எடுத்துக் கூறுவதால் தொல்காப்பியர் காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தில் தத்துவ உணர்வு தோன்றிவிட்டது என்பது புலனுகின்றது.

கண்ணன், பலராமன், முருகன் முதலிய கடவுளர்கள் பலரையும் குறிப்பிடும் சங்க நூல்கள் சிவபெருமானை முழு முதல் தலைவனுகிய கடவுள் என்று தெளிவாகக் கூறுகின்றன. 'காரிஉண்டிக்கடவுள்' 'பிறவாயாக்கைப் பெரியோன்' 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' 'கண்ணி கார் நறுங் கொன்றை' 'ஊர்தி வால் வெள்ளேறு' எனவரும் தொடர்கள் சிவபெருமானுடைய சிறப்பு நிலைகளை உணர்த்துகின்றன. பாண்டிய மன்னனைப் பாடுகின்ற ஒரு புலவர், 'சிவபெருமான் திருக்கோயிலை நீ வலம் வரும்போது உன் குடை தாழுவதாக'என்று பாடுகிறுர். சேரன் செங்குட்டுவன் சிவ வழிபாட்டை மேற்கொண்டிருந்தான் என்றும், திருமால் பிரசாதம் வந்தபோது அதனை தன் மார்பில் ஒற்றிக் கொண்டான் என்றும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இவற்றுல் சங்க காலத்து மன்னர்களும் சிவ வழிபாட்டில் ஈடுபட்டு இருந்தார்கள் என்பது புலனுகின்றது.

மத்திய காலம்

சங்ககாலத்திற்குப் பின்னர் பௌத்த, சைன சமயங்கள் தமிழ் நாட்டில் புகுந்து பரவி சைவ வைணவ நெறிகளைத் தாக்கி வந்தன. கி.பி ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இந்தியா முழுவதுமே சைன, பௌத்தமதக்கொள்கை கட்கு இரையாகி இருந்தது என்று கூறலாம். இந்த நிலையில் தமிழகத்தில் சில சான்றோர்கள் சைவ சமயம் மீண்டும் தலையெடுத்து மக்கள் அருள் நெறியில் நிற்க வேண்டுமே என்று கவலைப்பட்டார்கள். திருவதிகையில் திலகவதியாரும், சீர்காழியில் சிவபாத இருதயர் பகவதியாரும், மதுரையில் மங்கையர்க்கரசியார் குலச்சிறையாரும் இவ்வாறு கவலையுற்று திருவருளை நோக்கி முறையிட்டதின் பயனாக திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய பெருமக்கள் தோன்றினார்கள். தெய்வத் திருவருளை நிருபித்து முதன் முதலில் சைவ சமய உண்மைகளை மெய்ப்பித்த பெருமை அவர்களையே சாரும். பின்னர் சுந்தர மூர்த்தி சுவாமிகளும், மாணிக்கவாசகப் பெருமானும் தோன்றினார்கள். இவர்களால் சைவசமயம் மிகவும் பரவி மக்கட்குப் பயன்படும் வகையில் வளர்ச்சியடைந்தது என்று கூறலாம். திருமூலர், காரைக்கால் அம்மையார் முதலிய ஞானச்செல்வர்கள் நால்வர்க்கு முன்பே தோன்றியவர்கள் என்று கருதப்படுகின்றது. உலகியலில் வரும் துன்பங்களை நீக்கி மக்கட்கு நன்மை செய்ததோடு அமையாமல் மக்கள் அனைவரும் தாங்களாகவே துன்பத்தைப் போக்கிக்கொள்ளும் வழிமுறைகளையும் அதற்குத்துணையாக அருட் பாடல்களையும், நால்வர் பெருமக்கள் நமக்கு வழங்கினார்கள். சிவாலயங்களும் செழுமையுற்று நாள் வழிபாடு, திருவிழா முதலியவற்றால் மக்கட்கு நன்மையை விளைவித்து வந்தன.

சந்தான குரவர்

வடநாட்டில் ஆதிசங்கரராலும் மைசூர் முதலிய கன்னட நாட்டில் பசவன்னராலும் சைன பௌத்த சமயங்

கள் முறியடிக்கப்பட்டு இந்திய நாட்டுத் தொன்மையான சைவ வைணவ வழிபாடும் தத்துவ வாதங்களும் தலையெடுத்தன இந்நிலையில் சைவ சமயத்தின் தத்துவக் கொள்கை வெளிப்பட வேண்டியது அவசியமாயிற்று. நால்வர் பெருமக்கள் தோத்திர வாயிலாகக் கூறிய தேவார திருவாசகங்களின் உட்பொருளை மாறுபாடின்றிப் புரிந்து கொள்வதற்கு மெய்கண்டதேவர் பரம்பரையைத் திருவருள் தோற்றுவித்தது. லோகாயதம் — பௌத்தம் — சைனம்— ஏகான்மவாதம் — பட்டாச்சார்யம் — பாஞ்சராத்ரம் என்ற தத்துவக் கொள்கைகளிலுள்ள பொருந்தாமையை எடுத்துக்காட்டி சைவ சித்தாந்த தத்துவ உண்மைகளை சந்தான குரவர்கள் நிறுவினர்கள்.

சைவசித்தாந்தத்தின் சிறப்பு

பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மையை தெளிவு படுத்தும் ஆகமங்களை மேல்வரிச் சட்டமாகவும் முதல் நூலாகவும் சைவ சமயச் சான்றோர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். வேத உபநிடதங்களை மறுக்காமல் ஆகமங்களுக்கேற்ப வேத உபநிடதங்களைப் பொருள் செய்கிறார்கள். உலகம் சூன்யம் எனவும், உலகம் பொய்த்தோற்றம் எனவும் புத்தரும் சங்கரரும் கூறும் கருத்தை ஆல்பிரட் ஸ்வைஷர் என்பவர் அனுபவ விரோதம் என்று கூறுகிறார். நிலையாமையை உடைய உள்பொருளே உலகம் என்று திருவள்ளுவர் கூறுவதை அவர் மிகவும் போற்றிப் பாராட்டுகிறார். நடுநின்று ஆராய்கின்ற அறிஞர் எவரும் சைவ சித்தாந்தத்தின் சிறப்பினை உணராமல் இருக்க முடியாது. விண்வெளிக் கப்பல் முதலாக எண்ணற்ற புதினங்களைக் கண்டுபிடித்து உலகத்தையே மருளவைக்கும் விஞ்ஞானிகளும்கூட பிரபஞ்சத்துக்கு மூலப்பொருள் ஒளியா, ஒலியா, பொருளா, ஆற்றலா என்பது தங்கட்குப் புரியாத புதிராக இருப்பதாகக் கூறுகின்றனர். ஜடப் பொருளின் கூறுகிய மீனம் எவ்வாறு உலகத்தை அளந்தறியும் ஆற்றல் படைத்திருக்கிறது என்பது தங்கட்குப் புரியவில்லை என்கிறார்கள்.

அலெக்ஸிஸ் காரெல் என்ற பேரறிஞர் ஒரு நூல் முழுவதும் ஆராய்ந்து கூறி முடிவில் Still the man remains unknown என்று முடிவுகட்டுகிறார். விஞ்ஞானிகள் பிரபஞ்ச இயக்கத்தில் காணப்படும் நுணுக்கங்களைத்தான் துருவித்துருவி ஆராய்ந்திருக்கிறார்களே தவிர பிரபஞ்ச இயக்கத்துக்குக் காரணம் என்ன என்றோ பிரபஞ்சம் எதனால் இயக்கப்படுகின்றது என்றோ ஆராயவில்லை. தத்துவ உண்மைகளைப் பற்றி உலக அறிஞர்கள் அலைமோதுகின்ற இந்த நிலையுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் சைவ சித்தாந்தம் எவ்வளவு திட்டவட்டமாக உண்மைகளை உணர்த்துகின்றது என்பது புலனாகும்.

சைவ சித்தாந்தம்

இறைவன் — ஆன்மா — இறைவனை அடையவொட்டாமல் ஆன்மாவைச் சூழ்ந்துள்ள தளைகள் என்ற இவை மூன்றும் வெவ்வேறு உள்பொருள்களே. இவற்றைப் பதி-பசு - பாசம் எனச் சித்தாந்த நூல்கள் கூறும். இறைவன் ஒருவனே. ஆன்மாக்கள் எண்ணில்லாதன. தளைகள் ஆணவம் - கன்மம் - மாயை என மூன்றாகும். ஆன்மாக்கள் அறிவு அறியாமைக்கும், இன்ப துன்பங்கட்கும் ஆளாகின்றன. இந்த நிலையிலிருந்து அறியாமையற்ற அறிவு நிலைக்கும் துன்பமற்ற இன்ப நிலைக்கும் ஆன்மாக்கள் ஆளாகவேண்டும். அந்நிலையே சைவ சித்தாந்தத்தில் முத்தி என்று சொல்லப்படுகிறது.

பிரபஞ்சமோ ஆன்மாக்களோ இறைவனோ ஒன்றுமே உண்மையில்லை என்று புத்தர்கள் கூறுகின்றார்கள். பிரபஞ்சமும் ஆன்மாக்களும் பொய்த்தோற்றம் என்று மாயாவாதிகள் சொல்கிறார்கள். இவற்றைச் சைவ சித்தாந்தம் ஒப்புக்கொள்ளவில்லை. உள்பொருள் என நாம் நிச்சயித்த ஒன்று எக்காலத்தும் உள்பொருளாகத்தான் இருக்கும். இல்பொருள் என நாம் நிச்சயித்த ஒன்று எக்காலத்தும் இல்பொருளாகத்தான் இருக்கும். ஆதலால் இல்லாத

பொருள் உள்பொருள்போலத் தோன்றுவதோ, உள் பொருள் இல்லாத பொருளாகிவிடுவதோ ஒருபோதும் நிகழாது என்பது சைவ சித்தாந்தக் கருத்து. பிரபஞ்சம் ஜடப்பொருள். இறைவன் முற்றறிவினன். இறைவனுக்குப் பிரபஞ்சத்தால் ஆகற்பால தொன்றில்லை. ஜடமாகிய பிரபஞ்சத்திற்கும் பிரபஞ்சத்தால் பயனில்லை. இது போலவே வேதம் முதலிய அறிவு நூல்கள் இறைவனுக்குத் தேவையில்லை. பிரபஞ்சமோ அறியுமாற்றல் இல்லாதது. பிரபஞ்சத்தையும் வேதத்தையும் பயன்படுத்தி நன்மை யடைவது மூன்ருவது பொருளான ஆன்மாக்களே என்பது நமது சிந்தனைக்கும் அளவைகட்கும் ஒப்பமுடிந்ததாகிறது. மேலும் கீழும் உள்ளும் புறம்பும் பரந்து விரிந்த இறைவனது நிறைவில் அடங்கி அவனையே ஆதாரமாகக்கொண்டு அவனுலேயே இயக்கப்படுவது மாயை. முத்தி பெறும் வரையில் மாயையை ஆதாரமாகக் கொண்டும், முத்தி நிலையில் இறைவனை ஆதாரமாகக் கொண்டும் தங்கியிருப் பன ஆன்மாக்கள். ஆதலால் முப்பொரு ளுண்மையை நாம் ஒப்புக்கொண்டால் தத்துவ சம்பந்தமான சிக்கல்கள் பெரும்பாலும் தீர்ந்துவிடுகின்றன. தானே அறிந்தும் அறிவித்தும் நிற்பது கடவுட்பொருள் – அறிவிக்க அறிந்து பயனடைவது ஆன்மா – அறிவு உணர்வு இல்லாதன ஜடம் என இந்த மூன்று அடிப்படைகளே சைவ சித்தாந் தத்தைத் தாங்கி நிற்கின்றன என்று கூறி சைவசித்தாந்தம் என்ற தலைப்பினை முடித்துக்கொள்கின்றேன்.

சமயத் தலைவர்கள்

மன்பதைக்கு வழிகாட்டி உய்விக்க விரும்பிய தலைவர் கள் எண்ணில்லாதவர்கள் ஆங்காங்கு உலக மேடையில் தோன்றியுள்ளார்கள். அவர்கள் அனைவரும் தூய உள்ள மும் தன்னலம் கருதாமல் பிறர் நலத்தையே பேணிய சிறப்பும் உடையவர்கள். எனினும் உலக எதிர்ப்பு வந்த போது பல தலைவர்கள் உலகத்தார் கொடுமைக்கு இரை யாகி மறைந்தார்கள் என்றுதான் எல்லா வரலாறுகளும்

கூறுகின்றன. சைவசமயத் தலைவர்கள் திருவருளாற்றலால் உலகத்தாரை எதிர்த்து வென்று தாங்கள் கண்ட உண்மைகளை உலகத்தார்க்கு அறிவுறுத்தினர்கள். சைவ சமயத்தின் தனிப்பெருஞ் சிறப்பு இங்கேதான் இருக்கிறது தங்கள் பெற்றோரைப் பாராட்டி நினைப்பது தற்பெருமையோ குறுகிய நோக்கமோ ஆகாது. அதுபோல நமது சமயத் தலைவர்களின் ஈடு எடுப்பற்ற பெருமையை உணர்ந்து பாராட்டுவதும் தற்பெருமையோ குறுகிய நோக்கமோ ஆகாது.

'மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும் விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே' 'அஞ்சுவதி யாதொன்றும் இல்லை இனிஅஞ்ச வருவதும் இல்லை' என்றெல்லாம் அப்பர் பெருமான் பாடியிருக்கிறர். துர்வாசர் – பதஞ்சலி – வியாக்ரபாதர் முதலிய முனிவர்களையும் சமய குரவர் – சந்தான குரவர் – அறுபத்துமூவர் முதலிய எண்ணற்ற தலைவர்களையும் சைவ சமயம் உலகுக்கு அளித்துள்ளது. இறைவன் அருள்தான் உலகத்தை நடத்துகின்றது என்ற உண்மையை நிரூபித்து உலக மக்களை உறுதியான அருள் நெறிக்குத் திருப்பிய பெருமை அவர்களையே சாரும் இனிய தமிழ்மொழியில் செவ்விய இசையமைப்பில் பல்வேறு பண்கள் சந்தங்களில் அவர்கள் வழங்கிய தேவார திருவாசகப் பாடல்கள் உலகம் உள்ளவரை தமிழன் தலைநிமிர்ந்து நிற்கும்படியான தகுதியைக் கொடுப்பன. சமயத் தலைவர்கள் பரம்பரை தூர்ந்துவிடாமல் இந்த நூற்றுண்டின் தொடக்கம் வரை பல சான்றோர்கள் சைவ சமயத்தில் தோன்றியுள்ளார்கள். நமது தலைமுறைக்கு முன்பு பாம்பன் குமரகுருதாச சுவாமிகளும் ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகளும் தோன்றினர்கள் என்பதை அறியாதவர் இல்லை ஏழை — பணக்காரர் — சேவகன் – பேரரசன் – கற்றவன் - கல்லாதவன்–உயர்ந்த மரபினன் — தாழ்ந்த மரபினன் என்ற வேறுபாடுகள் எல்லாம் தெய்வ சந்நிதியில் இல்லை என்பதை நமது சமயம் நிரூபித்துள்ளது.

முத்தி

நினைவும் அறிவும் அழிந்துவிடுவதே முத்தி எனப் புத்தர் முதலியோர் கூறுகின்றனர். கல்லும் மண்ணும்போல உணர்ச்சியற்றுக் கிடப்பதே முத்தி எனச் சிலர் கூறுகின்றனர். தான் பிரமம்என அறிவதேமுத்தியென வேதாந்திகள் கூறுகின்றனர். வைணவர்களும் அகச்சைவர் சிலரும் உருவத்தோடு கூடியதே முத்தி எனக் கூறுகின்றனர். இவற்றையெல்லாம் மறுத்துச் சைவ சித்தாந்தம் தனது முடிவைத் தெளிவுபடுத்துகிறது. முத்தி நிலையில் ஆன்மா உருவக்கட்டை விட்டு நீங்கி விடுகிறது. முத்தியில் ஆன்மாக்களுக்கு இன்ப அனுபவம் உண்டு. முத்தி பெற்ற ஆன்மாக்கள் ஒருபோதும் துன்பநிலைக்கு மீள்வதில்லை. மாருத பேரின்ப அனுபவ நிலையே சைவ சித்தாந்த முத்தி நிலையாகும்.

இறை வழிபாடு

இறை வழிபாடு இன்றியமையாதது என்பதை முதலில் நாம் உணரவேண்டும். உலகம் எங்கும் தீய சக்திகள் ஆக்கம் செலுத்த முயன்று வருவதால் குழப்பமும் அச்சமும் நிச்சயமற்ற தன்மையும் பெருகி வருகின்றது. ஆன்மீக உணர்வு தலையெடுத்தாலல்லது இந்த நிலையிலிருந்து உலகத்தை மீட்க முடியாது. பெரிய சேனைத்தலைவராகவும் அமெரிக்க குடியரசுத் தலைவராகவும் இருந்து ஓய்வுபெற்ற டாக்டர் ஐசன்ஹவர் ஆன்மீக உளர்வைத் தட்டி எழுப்புவது ஒன்றுதான் உலகம் அமைதிபெறத் தகுந்த முயற்சியாகும் எனக்கூறுகின்றார். மிகப்பெரிய மருத்துவர்களால் தீராத சில்நோய்கள் இறைவழிபாட்டினால், தீர்ந்துவருவது கண்கூடு. ஆதலால் தனிப்பட்டவர் நலமுற்று வாழ வேண்டுமானாலும் சரி, நாடு அல்லது உலகமே அமைதி பெற வேண்டுமானாலும் சரி அதற்கு இறைவழிபாடு இன்றியமையாதது என்பது புலனாகின்றது.

மனம்

மனித வாழ்வை ஆள்வது மனமே. மனம் திருந்தினு லல்லது மனிதன் அமைதியாக வாழ முடியாது விஞ்ஞா னம் எல்லோருக்கும் பயன்படுவதுபோல அருள்ஞானம் பயன்படவில்லை எனச் சிலர் கருதுகிறார்கள். அஃது உண்மையல்ல. விஞ்ஞானம் புறத் தேவைகளைத்தான் நிறைவு செய்கின்றது. மெய்ஞ்ஞானமோ அகவுணர்வைத் தொட்டு நன்மை செய்கின்றது. கோடிக்கணக்கான பாமர மக்கள் தெய்வத்தைப் பிரார்த்தித்து தங்கள் துன்பங்கட் குத் தீர்வு காண்கிறார்கள். பணப் பெருக்கமும் பதவி உயர்வும் துன்பத்தின் அல்லது கவலையின் உச்சிக்குக் கொண்டு சேர்த்து விடுவதால் பணக்காரர்களும் பதவி யாளர்களும்கூட தங்களையறியாமல் தெய்வத்தை நாட வேண்டிய காலம் வந்துவிடுகிறது. ஆசை — கோபம் — பொறாமை முதலிய தீய எழுச்சிகள் மனத்தில் எழுவதால் அவற்றைத் தடுத்து நீக்கி நிராசை—அமைதி—பொறுமை முதலிய நல்ல பண்புகளை வளர்க்க வேண்டும். உலகத் தீமைக்கு அஞ்சாமல் உலகத்தை எதிர்த்து நிற்க வேண்டு மாறால் கடவுட்பற்று ஒன்றுதான் அதற்குத் துணைசெய்யும். மக்கள் விருப்பத்தையெல்லாம் நிறைவேற்றி வைப்பது இயலாத காரியம். அவ்வாறு சொல்லிப் பதவிக்கு வருகின்றவர்கள் எவ்வளவோ சிக்கல்களுக்கும் இடர்ப்பாட் டிற்கும் ஆளாவதை நாம் கண்ணாரக் காண்கிறோம். சமயத் தலைவர்கள் மக்களைத் தீயவழியில் செல்லவொட்டாமல் தடுத்து நல்லவழியில் செலுத்துகிறார்கள். அறியாமையால் மக்கள் எதிர்த்தாலும் அதனைத் தாங்கி நின்று மீண்டும் நன்னெறியை வற்புறுத்துகிறார்கள். மனம் பண்படுவது தான் வழிபாட்டின் பயனாக இருக்கவேண்டும் என்பதை இங்கே நாம் சிந்தித்துத் தெளிவோமாக.

வழிபாட்டு முறை

சைவ சமயம் உலக அரங்கில் வாழும் மக்கள் அனைவ ரும் வழிபாட்டின் பயனையடைய வழிவகுத்திருக்கிறது.

முன்னைய பிறவிகளில் செய்த தவமுயற்சியால் தோன்றிய ஞானச் செல்வர்கள் ஒருசாரார் விதிமுறையைப் பின்பற்றி படிப்படியாக உயர்ந்து ஞானம் எய்துகின்றவர்கள் ஒரு சாரார். காலத்திற்கும் இடத்திற்கும் தங்கள் நிலைக்கும் ஏற்ப ஏதாவதொரு செயல்மூலம் தெய்வத்தை வழிபட்டவர்கள் பல்லாயிரவர்கள். கண்ணப்பர் — அதிபத்தர் — திருநாளைப்போவார் — திருக்குறிப்புத்தொண்டர் முதலியவர்கள் தங்கள் தங்கள் நிலைக்கேற்பத் தொண்டு செய்து திருவருளைப் பெற்றார்கள் என்று பெரியபுராணம் கூறுகின்றது. திருஞானசம்பந்தர் முதலியவர்கள் நேரே இறைவனருளைப் பெற்றவர்கள்.

இனி விதிமுறையான வழிபாடுகள் எவை என்பதைச் சிந்திப்போம். சரியை — கிரியை—யோகம்—ஞானம் என நால்வகை வழிபாட்டு முறைகள் படிப்படியாக அமைந்துள்ளன. சிவபெருமானுக்கும் சிவனடியார்கட்கும் தொண்டு செய்தல் ஆரம்ப நிலை. இதுவே சரியை எனப்பெறுவது. இவ்வாறு தொண்டு செய்ததன் பயனாக இறைவனை அருச்சித்து வழிபடவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். அந்நிலையில் ஏதாவதொரு மூர்த்தியினை அபிடேகம் நைவேத்யம், தூப தீபம் முதலியவற்றால் வழிபடுவது கிரியை எனப்பெறும். இவ்வாறு சரியை கிரியைகளை முறையாகச் செய்து வந்தவர்கட்கு மனக்கண் திறந்து ஆழ்ந்த அமைதியை விரும்பும் நிலை உண்டாகும். அதன் பின்னர் யோக நெறியில் தியானசமாதியை அடைவார்கள். இவ்வாறு சரியை-கிரியை-யோகத்தில் நின்றதன் பயனாய் ஞானம் விளையும். அதனால் தன்னையும் தலைவனாகிய ஆண்டவனையும் தனக்கு அந்நியமான பாசத்தையும் உணர்ந்து பாசத்தினை விட்டு நீங்கிப் பதியைச்சென்று சேரும் ஆன்மா. இறைவனைத் தலைவனாகவும் தன்னைப் பணியாளனாகவும் கருதிச் சிலர் வழிபட்டார்கள். தொண்டு நெறி அல்லது தாசமார்க்கம் என இந்தநெறி குறிக்கப்படுகின்றது. இறைவனைத் தந்தையாகவும் தன்னை மைந்தனாகவும் கருதி வழிபடுவது சத்புத்ர மார்க்கம் அல்லது

மகன்மை நெறி என்று சொல்லப்பெறுகின்றது. இறைவனைத் தோழனாக அல்லது நண்பனாகக் கருதி வழிபடுவது தோழமை நெறி அல்லது யோக மார்க்கம் எனப்பெறும். இறைவனை ஆசானாகவும் தன்னை மாணவனாகவும் கருதி வழிபடுவது சன்மார்க்கம் அல்லது ஞானநெறி எனப்பெறும்.

உலகத்தை ஒதுக்காமலும் வெறுக்காமலும் வாழ்வாங்கு வாழ்ந்தே ஞானத்தையும் மோட்சத்தையும் பெறலாம் எனத் தெளிவாகக் கூறுவது சைவ சமயத்தின் தனிச்சிறப்பாகும். இல்லறம்—துறவறம் இரண்டுமே சமமான தகுதி வாய்ந்தவை என்பது சைவ சமயக் கோட்பாடாகும். துறவறமும் வேண்டும் எனத் திருவள்ளுவர், திருஞான சம்பந்தர் முதலிய சான்றோர்கள் கருதுகிறார்கள். ஆகவே மனத்தூய்மை—அன்புடைமை—பிறர் நலம் பேணல் இந்த பண்புகள் தான் கவனிக்க வேண்டியவைகளே தவிர இல்லறமா துறவறமா என்பதல்ல. இறைவனை வழிபடுவது நமது உள்ளத்தில் அன்பு பெருகி அனைத்துயிர்க்கும் இரக்கம் காட்டுவதே நோக்கமாக இருக்கவேண்டும். நாம் செம்மையாக வாழவும் பிறருக்குத் தொண்டு செய்யவும் இறைவனை அடையவும் எல்லாவற்றுக்கும் அன்புதான் இன்றியமையாதது. அன்பின் முதிர்ச்சியே அருளாகும்.

அன்பேயென் அன்பேயென் றன்பால் அழுதரற்றி
அன்பேயன் பாக அறிவழியும் — அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யும்அவை
சாற்றும் பழமன்றே தான்

எனத் திருக்களிற்றுப்பாடியாரும்,

அன்போ டுருகி அகம்குழை வார்க்கன்றி
என்போன் மணியினை எய்தவொண் ணாதே

எனத் திருமந்திரமும்,

கோடி தீர்த்தம் கலந்து குளிக்கினும்
ஆடும் நெஞ்சில் அரனுக்கன் பில்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனொ டொக்குமே

எனத் தேவாரமும் கூறுவது காண்க. அன்புதான் வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்வதைச் சுட்டிக்காட்டி இறை வழிபாட்டைக் கைவிடுவது மிகவும் தவறான செயலாகும்.

ஆண்டவனிடத்தும் ஆன்மாக்களிடத்தும் ஒப்ப அன்பு செலுத்தவேண்டும் எனச் சைவம் விதிக்கின்றது. ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போலத் தெய்வ பக்தியும் ஜீவகாருண்யமும் அமைந்திருக்க வேண்டும். ஆண்டவனை வழிபடாமல் ஆன்மாக்கட்குத் தொண்டு செய்தல் நிறைவேறாது. ஆன்மாக்களிடத்தில் அன்பில்லாதவர்கட்கு ஆண்டவன் இரக்கம் காட்டமாட்டான்.

''ஈசனடிக் கன்பில்லார் ஈசனுக் கன்பில்லார்
எவ்வுயிர்க்கன் பில்லார் தமக்குமன் பில்லார்''

என்ற அருட்பாடல் இதனை வலியுறுத்துகின்றது.

மெய்யன்பர்களே!

இறுதியாக ஒன்று சொல்லி எனது உரையை முடித்துக் கொள்கின்றேன். சைவ சித்தாந்தத்தில் அடங்காத தத்துவக் கொள்கைகளோ சிவாலயத்தில் காணப்படாத மூர்த்திகளோ உலகில் எங்குமே இல்லை. இதனை உள்ளவாறுணர்ந்து உண்மையாக சைவசமய நெறியைப் பின்பற்றி ஒழுகி நாமும் வாழ்ந்து உலகத்தையும் வாழ வைப்போமாக.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

—சேக்கிழார்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா பிரஸ், செம்பனார்கோவில்.